
E M P O W E R

E — எமது
சகல வழிகளிலும்
வினைத்திறன்

M — உங்களுக்கு சிறந்தவற்றை
கொண்டு வருவதற்கான
தூண்டுதல்

P — எமது எல்லா
செயற்பாடுகளிலும்
மக்கள் தோழமை

O — தேசமொன்றாக
வளர்வதற்கான
வாய்ப்புக்கள்

W — எமது சமூகத்தின்
வளர்ச்சி

E — சக்திமிக்க
பல்லின
குழு வேலை

R — உங்களுக்கும்
நாட்டிற்கும்
நம்பகமாகயிருத்தல்

# நாம்
# லெகோ

ஆண்டறிக்கை 2013

## எமது

# தூரநோக்கு

புத்தாக்க சுற்றாடல் தோழமையுள்ள வணிகத்தினூடாக மக்களின் வாழ்விற்கு வெளிச்சத்தை வழங்கி மகிழ்வுறுதல்

## எமது

# இலட்சிய நோக்கு

தொடர்ச்சியான புத்தாக்கத்தினூடாக சமூகத்திற்கு மிகச்சிறந்த சக்திவள தீர்வுகளை வழங்குதல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கூட்டிணைப்புத் தகவல்கள் | 05 |
| தலைவரின் செய்தி | 06 |
| பணிப்பாளர் சபை | 08 |
| பணிப்பாளர் அறிக்கை | 09 |
| கூட்டிணைந்த முகாமைத்துவம் / சிரேஷ்ட முகாமைத்துவம் | 20-21 |
| சுதந்திர கணக்காய்வாளரின் அறிக்கை | 23 |
| நிதி நிலைமைக் கூற்று | 24 |
| அனைத்தும் உள்ளடங்கிய வருமானக் கூற்று | 25 |
| உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று | 26 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 27 |
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் | 29-58 |
| முக்கியமான செயலாற்றல்கள் | 59 |

# நாம்

நிலையான ஆராய்ச்சி அபிவிருத்தியின் ஊடாக நவீன தொழில்நுட்பத்துடன் எமது நாட்டை முன்னேற்றுவதற்காக புத்தாக்கங்களை மேற்கொள்ளும் நிறுவனமாகும்.

# புத்தாக்கம் செய்வீர்



# கூட்டிணைப்புத் தகவல்கள்

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனி**

### சட்ட வடிவம்

1982 இன் 17 ஆம் இலக்க மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் 1983 இல் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள தனியார் கம்பனியாகும்.

### 2013.01.01 முதல் 2013.12.31 வரையான காலப்பகுதிக்குரிய பணிப்பாளர்களின் பட்டியல்

| | |
|---|---|
| திரு. எச்.ஜீ. சாகர காரியவசம் | 2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் (தலைவர், 2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில்) |
| திரு. டபிள்யூ.பீ. கனேகல | 2013 மார்ச் 01 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் |
| திரு. டபிள்யூ.ஜே.எல்.எஸ். பர்னாந்து | 2013 ஒக்தோபர் 10 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் |
| திருமதி. பீ.கே.ஏ.டீ. தி. சில்வா | 2013 யூலை 01 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் |
| திரு. ரொஹான் செனவிரத்ன | 2013 யூன் 30 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் |
| திரு. டீ.பீ.எஸ். ஜயவர்தன | 2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் |
| திரு. சுதர்மன் தி கொஸ்தா | 2013 நவம்பர் 13 முதல் அமுலாகும் விதத்தில் நியமிக்கப்பட்டார் |

### கம்பனிச் செயலாளர்
வரையறுக்கப்பட்ட பீ.டபிள்யூ. கோபரேட் செக்ரடரியல் (தனியார்) கம்பனி
இல. 3/17, கின்ஸி வீதி, கொழும்பு 08.

### பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்
இல 411, காலி வீதி, ஈ.எச். கூரே கட்டிடம், கொழும்பு 03

### கணக்காய்வாளர்
ஏர்ன்ஸ்ட் என்ட் யாங் - பட்டயக் கணக்காளர்
201, தி சேரம் வீதி, கொழும்பு 10

### வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
சிலோன் கொமர்சியல் வங்கி பீஎல்சீ
ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ
நேஷன் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ
மக்கள் வங்கி
சம்பத் வங்கி பீஎல்சீ
செலான் வங்கி பீஎல்சீ
ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கி
அரச அடைமான முதலீட்டு வங்கி
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிஷ
வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி
ஹொங்கொங் என்ட் சங்காய் கோபரேஷன் லிமிடட் (HSBC)
தேசிய சேமிப்பு வங்கி (NSB)
DFCC வர்தன வங்கி பீஎல்சீ
சிரிபாங் என்.ஏ
பான் ஏசியா பாங் கோபரேசன் பீஎல்சீ (PABC)
யூனியன் வங்கி பீஎல்சீ

# தலைவரின் செய்தி

1983 இல் லெகோவின் ஆரம்பம் முதல் இலங்கையின் தேசிய உட்கட்டமைப்பு பின்புலத்தில் அது முக்கிய பங்கினை வகிப்பதுடன் பிரதான பயன்பாட்டு வழங்குனர் என்ற வகையில் தேசத்திற்கு பொறுப்புணர்ச்சியான சேவையினை வழங்கி 2013 இல் லெகோ 30 ஆண்டுகள் வெற்றிப்பாதை பூர்த்தியினை கொண்டாடியது. எமது ஆரம்பத்தில் திடமான அஸ்திவாரத்தை இட்டு அதன் மூலம் தனது வாடிக்கையாளர்களிற்கு நம்பகரமானதும் தரமானதுமான சேவையினை தொடர்ச்சியாக வழங்குவதற்கு லெகோவிற்கு பலமாக இருந்தமைக்கு நன்றி கூறுவதற்கு இது ஒரு குறுகிய வழியல்ல.

லெகொவின் 30 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு உள மகிழ்வுடன் கூடிய நல்வரவை தெரிவிப்பதுடன் கடந்த 12 மாதங்களின் செயன்முன்னேற்றத்தையும் செயலாற்றலையும் எமது பெறுமதிமிக்க பங்குதாரர்களிற்கு சமர்ப்பிக்கின்றேன்.



## நிதிசார் முக்கிய விடயங்கள்

மீளாய்வாண்டில் லெகோவினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒட்டு மொத்த செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமான செயலாற்றலை காட்டியமை காரணமாக திருப்திகரமாக காணப்பட்டது.

2012 இன் ரூபா 19,761 மில்லியனுடன் ஒப்பிடுகையில் தொகுதியினால் ரூபா 22,373 மில்லியன் ஒட்டு மொத்த வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 2012 இன் சீராக்கல்களிற்கு முன்னரான ரூபா 3,793 மில்லியன் மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 5,469 மில்லியன் மொத்த இலாபத்திற்கு விற்பனைகளில் வெளிப்படுத்தப்பட்ட 13% வளர்ச்சி பங்களித்திருந்தது.

காசு மிகைகளை குறுங்கால மற்றும் நீண்டகால முதலீட்டு மார்க்கங்களில் முதலீடு செய்தமையினால் 2013 இல் ரூபா 864 மில்லியன் வட்டி வருமானம் பெறப்பட்டிருந்தது.

சீனாவின் அன்டெ மீற்றர் குரூப் இன் கூட்டு முயற்சிகளில் ஒன்றான அன்டெ லெகோ மீற்றரிங் கம்பனி (தனியார்) லிமிடட் இடமிருந்து கிடைத்த ரூபா 3.4 மில்லியன் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (தனியார்) லிமிடட் இடமிருந்து கிடைத்த ரூபா 573 மில்லியன் தொகைகளை பங்குலாபம் உள்ளடக்கியுள்ளது.

தேறிய சொத்தின் வளர்ச்சி 2012 இன் ரூபா 15,256 மில்லியன் தொகையிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 15,366 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் பங்கொன்றிற்கான தேறிய சொத்தும் 2012 இன் ரூபா 133 உடன் ஒப்பிடுகையில் 2013 இல் ரூபா 134.19 ஆக அதிகரித்து வளர்ச்சியினைக் காண்பித்தது.

2013 ஆம் ஆண்டு முதல் கட்டாயத் தேவைப்பாடாக காணப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியவாறு 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன் நிதிப்பிரிவின் பொறுப்புணர்ச்சி மிக்க வேலை காரணமாக நாம் மேலுமொரு முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினை பெற்றுள்ளோம்.

# தலைவரின் செய்தி

## செயற்பாடுகள்

மீளாய்வாண்டில் லெகோ 1.43% நுகர்வோர் வளர்ச்சினை உள்வாங்கியமையால் அது எமது மொத்த நுகர்வோர் தளத்தினை 507,986 ஆக அதிகரிப்பதற்கு பங்களித்தது. கம்பனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மிகக் குறைவான 4.6% இனை பதிவு செய்து இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மிகக் குறைந்த நியமத்தைக் காட்டிலும் 1% குறைவாகக் காணப்பட்டது.

2013 இல் எமது நுகர்வோரிற்கு 1,221 GWh இற்கும் மேலாக விநியோகிக்கப்பட்டதுடன் பசுமை சக்திவளக் கொள்கையினைப் பாதுகாத்து மேலும் 2018 புதிய மின்மானி இணைப்புக்கள் வழங்கப்பட்டன.
2013 திசெம்பர் அளவில் விநியோக முறைமைச் சொத்துக்கள் உயர் வோல்டேஜ் வழிகள் 1,120 கி.மீ, 2,187 விநியோக உப நிலையங்கள் மற்றும் 1,398 மொத்த உபநிலையங்களின் அனுசரனையுடன் தாழ் வோல்டேஜ் வழிகள் 3,620 கி.மீற்றரினை அடைந்திருந்தது. மொத்தத்தில் ரூபா 595.39 மில்லியன் பெறுமதியினை லெகோ விநியோக சொத்து முறைமைக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

பொதுநலவாய அரசாங்கங்களின் தலைவர்களது சந்திப்பின் ஏற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட விசேட கோரிக்கையின் பிரகாரம், பிரசித்திமிக்க ஹிக்கடுவ கடற்கரையை பிரகாசப்படுத்துவதற்காக விளக்குக் கம்பங்களை வைப்பதற்கு மேலதிகமாக காலி கோட்டைப் பகுதியில் புதிய வெளிச்சமூட்டல் முறைமையினை பொருத்துவதற்காக லெகோ தனது அறிவினையும் நிபுணத்துவத்தினையும் வழங்கியது.

தனது கிளை நட்டத்தினை கட்டுப்படுத்தி கண்காணித்தல் செயற்பாட்டை மீளாய்வாண்டிலும் லெகோ முன்னெடுத்து எதிர்காலத்தில் நட்டமேற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முறைமைச் சராசரி மின்சாரத் தடைகளை குறிப்பிடத்தக்களவில் குறைப்பதற்கு லெகோவிற்கு முடிந்ததனை பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றேன். மீளாய்வாண்டில் காலக் குறியீடு 30% ஆக காணப்பட்டது.

## பொறியியல்

லெகோ வெளிநாடுகளில் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை கண்டுபிடிப்பதில் முதற்கட்ட வேலைகளைத் தொடங்கியிருந்ததுடன் தற்போதும் கூட மதிப்பீட்டின் கீழுள்ள தொழில்நுட்ப ரீதியான உயர்தர வீதி விளக்கு முறைமையொன்றை அபிவிருத்தி செய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.

நகர்ப்புற பட்டிணப் பிரதேசங்களில் காணப்படுகின்ற மேலேயுள்ள கம்பி வழிகளை நிலக்கீழ் கம்பி வழி வலைப்பின்னல்களாக மாற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை நாம் தொடங்கியுள்ளோம். இது வழங்கல் நம்பகத் தன்மையை அதிகரிப்பதுடன் பட்டிண துலங்கலையும் மேம்படுத்தும்.

மின்சக்தியினை உற்பத்தி செய்யும் துறைக்கு மாறுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளதுடன் சிறிய நீர் மின் உற்பத்தி மற்றும் வளி மின் உற்பத்தி செயற்திட்டங்களை கண்டுபிடிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

## மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்

மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மறுசீரமைப்புக்களும் மாற்றங்களும் ஒழுங்கமைத்தல் கட்டமைப்பிலும் வேலைச் செயன்முறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்திமையின் விளைவாக வினைத்திறனிலும் லெகோ சேவை வழங்கலின் தரத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது.

லெகோ பதவியணியின் முக்கியத்துவத்தினையும் பெறுமதியினையும் அங்கீகரித்து, லெகோ பதவியணியின் இயலுமைகளையும் இயலளவினையும் முன்னேற்றும் நோக்குடன் பல்வேறு இயளலவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. தொகுதியின் கூட்டிணைந்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டு தூண்டப்பட்ட பதவியணியொன்றை வைத்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

தனது பதவியணியின் நலனோம்பல்களை கருத்திற் கொண்டு 2013 இல் நீண்டகாலத்திற்கு செல்லுபடியாகும் ஊக்குவிப்புத் திட்டமொன்று அமுலாக்கப்பட்டதுடன் 25 ஆண்டுகளிற்கும் மேலாக கம்பனிக்காக உழைத்த பதவியணினருக்கு விசேட வெகுமதிகள் வழங்கப்பட்டன.

## நன்றியுரை

மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் செயலாளர் அவர்களிற்கு அவர்களது தொடர்ச்சியான வழிகாட்டலுக்கும் ஆதரவுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.
அர்ப்பணிப்புடனும் உறுதுணையாகவும் செயற்பட்டமைக்காக எனது சகாக்களுக்கும் சபையின் முன்னாள் பணிப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சகல பதிவியணியினதும் பொது முகாமையாளரினால் வழிநடாத்தப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும் ஒத்துழைப்பு கிடைக்காதிருந்திருப்பின் இவ்வறிக்கையின் பக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள செயலாற்றலை அடைய முடியாது போயிருக்கும்.

கடந்த காலத்தை வெற்றியான காலமொன்றாக உருவாக்குவதற்கு எமக்கு உறுதுணையாக செயற்பட்டோருக்கு எனது நன்றியை முன்வைப்பதுடன் லெகோவின் சகல வாடிக்கையாளர், நுகர்வோர், பங்குதாரர்கள், வணிக அமைப்புக்கள், வங்கியாளர்கள், வழங்குனர்கள், கம்பனிச் செயலாளர்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் இங்கு குறிப்பிடப்படாத ஏனையோர்கள் ஆகிய சகலருக்கும் அவர்களது உதவிகள் மற்றும் ஒத்துழைப்பிற்காக பெருமிதத்துடனான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முடிவுரையாக பாரிய பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை தூண்டுவதற்கு அரசாங்கத்தினதும் ஏனையோர்களினதும் தொடர்ச்சியான பங்காளராக லெகோவின் 2014 ஆம் ஆண்டிற்காக பாரிய எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்த விரும்புகின்றேன். ஒரேயொரு நடவடிக்கையுடன் தொடரும் பயணத்தில் அதன் 30 ஆவது ஆண்டு நிறைவை லெகோ கொண்டாடுகிறது. பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு, எமது சகல பங்குதாரர்களினதும் சுபீட்சத்தினை உறுதிப்படுத்துவதற்காக நான் இந்தப் பயணத்தை தொடர்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

சாகர காரியவசம்
சட்டத்தரணி
தலைவர்

# பணிப்பாளர் சபை



திருமதி. பீ.கே.ஏ.டீ த சில்வா
சபை பணிப்பாளர்

திரு. எச்.ஜீ. சாகர காரியவசம்
தலைவர்

திரு. டபிள்யூ.பி. கனேகல
சபை பணிப்பாளர்

திரு. டபிள்யூ.ஜே.எல்.எஸ் பர்ணாந்து
சபை பணிப்பாளர்

திரு. ரொஹான் செனவிரத்ன
சபை பணிப்பாளர்
(படத்தில் இல்லை)

# வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனி

## கம்பனியின் செயற்பாடுகள் மீது பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடனான அதனது ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்ட தகவல்கள் மற்றும் சில மேலதிகத் தகவல்களை கம்பனியின் செயற்பாடுகள் மீதான ஆண்டறிக்கை உள்ளடக்கியுள்ளது.

## கம்பனியினதும் துணைக் கம்பனிகளினதும் பிரதான நடவடிக்கைகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் மீளாய்வு

கம்பனியின் அடிப்படைச் செயற்பாடான மின்சாரத்தை சில்லறையாக விற்பனை செய்யும் வணிகம் மீளாய்வாண்டிலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. கம்பனி மின்சாரத்தை உற்பத்தி செய்து முகாமைத்துவம் செய்யும் தேசிய நிறுவனமான இலங்கை மின்சார சபையிடமிருந்து மொத்தமாக கொள்வனவு செய்து கம்பனியினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற நவீன விநியோக முறைமையின் ஊடாக வாடிக்கையாளர்களிற்கு விநியோகிக்கின்றது.

துணைக் கம்பனிகளும் அவற்றின் அடிப்படைச் செயற்பாடுகளும் வருமாறு:

வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி

நாட்டில் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி

இலங்கை மற்றும் ஏற்றுமதி சந்தையின் இலத்திரனியல் மீற்றர் தேவையினை சமாளிப்பதற்காக சக்திவள மீற்றர் உற்பத்தி வசதியினை உருவாக்குதல்.

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | தொகுதி | கம்பனி | தொகுதி | கம்பனி |
| வருமானம் | 22,373,120 | 21,660,450 | 19,761,169 | 18,941,440 |
| மொத்த இலாபம் | 2,814,553 | 2,760,835 | 3,899,920 | 3,793,425 |
| வரிக்கு முன்னர் இலாபம் | (57,542) | (89,347) | 2,415,351 | 2,399,174 |
| ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 294,537 | 243,146 | 2,003,981 | 1,944,353 |

## நிதிக்கூற்றுக்கள்

பணிப்பாளர் சபையின் சார்பாக பூரணமான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் திரு. எச்.ஜீ. சாகர காரியவசம் மற்றும் திரு. டபிள்யூ.பீ. கனேகல ஆகியோரால் கையொப்பமிடப்பட்டன.

## கணக்காய்வாளர் அறிக்கை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்/இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS) அடங்கலான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன் அதற்காக கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 09 முதல் 19 வரையான பக்கங்களிலும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 2.2 முதல் 2.5 வரையும் தரப்பட்டுள்ளன.

### கூறப்பட்ட மூலதனம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த கூறப்பட்ட மூலதனம் ரூபா 1,145.1 மில்லியனாக காணப்பட்டதுடன் அது 113,580,264 "ஏ" வகுப்பு சாதாரணப் பங்குகளையும் 926,390 "பீ" வகுப்பு சாதாரண பங்குகளையும் பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

கம்பனியின் பங்கு மூலதனத்தின் அசைவு கணக்குகளிற்கான குறிப்பு 9 இல் தரப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்கள்

கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவில் உள்ளவாறு பதவி வகித்த தொகுதியின் பணிப்பாளர்களது பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திரு. எச்.ஜீ. சாகர காரியவசம்
(2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில்)

திரு. டபிள்யூ.பீ. கனேகல
(2013 மார்ச் 01 முதல் அமுலாகும் விதத்தில்)

திருமதி. பீ.கே.ஏ.டீ. தி. சில்வா

திரு. ரொஹான் செனவிரத்ன

திரு. டீ.பீ.எஸ். ஜயவர்தன
(2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில்)

திரு. டபிள்யூ.ஜே.எல்.எஸ். பர்னாந்து
(2013 ஒக்தோபர்10 முதல் அமுலாகும் விதத்தில்)

திரு. எம். எஸ் தி கொஸ்டா
(2013 நவம்பர் 13 முதல் அமுலாகும் விதத்தில்)

திரு. சீ.ஜே. ஹபுதந்ரி 2013 பெப்ரவரி 08 முதல் அமுலாகும் விதத்தில் பதவியை இராஜினாமா செய்திருந்ததுடன் திரு. எச்.ஜீ. சாகர காரியவசம் 2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில் சபையின் பணிப்பாளராகவும் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

பேராசிரியர் டபிள்யூ. அபேவிக்ரம 2013 சனவரி 31 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலக்கப்பட்டதுடன் திரு. டபிள்யூ.பீ. கனேகல இலங்கை மின்சார சபையின் தலைவராக செயற்பட்டு அகவிதியின் 81(i) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2013 மார்ச் 01 முதல் அமுலாகும் விதத்தில் கம்பனியின் பணிப்பாளராக பதவியேற்றார்.

திரு. டீ. பிரியந்த மற்றும் எஸ். ஜயவர்தன ஆகியோர் 2013 மார்ச் 08 முதல் அமுலாகும் விதத்தில் சபையின் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டதுடன் 2014 ஏப்ரல் 28 முதல் அமுலாகும் விதத்தில் பணிப்பாளராக இராஜினாமா செய்தனர்.

திரு. ஏ.ஏ.ஆர். அபயசிங்ஹ தனது பதவியிலிருந்து 2013 மார்ச் 01 முதல் அமுலாகும் விதத்தில் இராஜினாமா செய்தார்.
திரு. பீ.என்.ஜஎவ்.ஏ. விக்ரமசூரிய இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்ட திரு. எவ்.கே மொஹிதீன் தனது பதவி வழியால் அகவிதியின் 81(i) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2013 யூலை 18 முதல் அமுலாகும் விதத்தில் கம்பனியின் பணிப்பாளர்களாக மாறினார். அதனைத் தொடர்ந்து திரு. எவ்.கே மொஹிதீன் 2013 ஒக்தோபர் 09 முதல் அமுலாகும் விதத்தில் பதவி விலக்கப்பட்டதுடன் 2013 ஒக்தோபர் 10 முதல் அமுலாகும் விதத்தில் திரு. டபிள்யூ.ஜே.எல்.எஸ். பர்னாந்து பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திருமதி பீ. கொடிதுவக்கு மற்றும் எஸ்.டீ. கொஸ்தா ஆகியோர் 2014 மே 05 முதல் அமுலாகும் விதத்தில் சபைக்கு நியமிக்கப்பட்டனர்.

## துணைக் கம்பனிகளின் பணிப்பாளர்கள்

வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி

திரு. எச்.ஜீ. சாகர காரியவசம்
திரு. டபிள்யூ.ஜே.எல்.எஸ். பர்னாந்து
திரு. லியூ ஜிஅன்வூ
திரு. சென் டின்கிங்
திரு. எச்.எஸ். சோமதிலக

## வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி

திரு. எச்.ஜீ. சாகர காரியவசம்
கலாநிதி. டீ.எம்.டீ.ஓ.கே. திஸாநாயக்க
திரு. டபிள்யூ.ஜே.எல்.எஸ். பர்னாந்து
திரு. எச்.எஸ். சோமதிலக
திரு. ஏ.ஏ.ஆர். அபயசிங்ஹ

### ஆர்வவெளிப்படுத்தல் பதிவேடு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு ஆர்வவெளிப்படுத்தல் பதிவேடொன்றை கம்பனியும் துணைக் கம்பனிகளும் பராமரிக்கின்றன.
மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கம்பனியுடன் உடன்படிக்கையொன்றில் அல்லது தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்படுதல் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 26 இல் தரப்பட்டுள்ளன.

### பணிப்பாளர் ஊதியம்

பணிப்பாளர் ஊதியங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 26.3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறிப்பு 20 இன் கீழுள்ள தொகுதி நிரலில் காணப்படும் பணிப்பாளர் கட்டணங்கள் துணைக்கம்பனிப் பணிப்பாளர்களின் ஊதியத்தினையும் உள்ளடங்கியுள்ளது.

### நன்கொடைகள்

மீளாய்வாண்டில் கம்பனியாலும் தொகுதியாலும் மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகளும் உதவு தொகைகளும் முறையே ரூபா 175,000 ஆகவும் ரூபா 233,000 ஆகவும் காணப்பட்டன.

### பங்கிலாபங்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான முதலாவதும் இறுதியுமான பங்கொன்றிற்கு ரூபா 0/50 வீதமான மொத்தம் ரூபா 57.25 மில்லியன் பங்கிலாபம் கணக்காய்வாளரிடமிருந்து சான்றிதழ் பெறப்படுதலின் நிபந்தனைக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளிற்கான குறிப்பு 3 இல் தரப்பட்டுள்ளன.

### ஒதுக்கங்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் மொத்த ஒதுக்கங்கள் ரூபா 14.08 பில்லியனாக காணப்பட்டதுடன் அது ரூபா 1.55 பில்லியன் மூலதன ஒதுக்கங்களையும் ரூபா 12.53 பில்லியன் வருமான ஒதுக்கங்களையும் உள்ளடக்கியிருந்தது. இதன் மீதான அசைவுகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 10 இல் தரப்பட்டுள்ளன. தொகுதியின் ஒதுக்குகள் காலப்பகுதியில் ரூபா 14.2 பில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1.6 பில்லியன் வருமான ஒதுக்கங்களாக காணப்பட்டன.

### தொழில் செய்வோர்

2013 இன் இறுதியில் கம்பனியில் தொழிலாற்றுவோரின் எண்ணிக்கை 1,462 ஆகும். (2012 இன் இறுதியில் 1,463 ஆகும்)

### பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்கவைகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்கவைகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 24.2 இல் தரப்பட்டுள்ளன.

### கணக்காய்வாளர்கள்

கம்பனியின் கணக்காய்வாளராக ஏர்ன்ஸ்ட் என்ட் யங், பட்டயக்கணக்காளர் கடமையாற்றுவதுடன் அமரசேகர என்ட் கோ., பட்டயக்கணக்காளர் கம்பனிக்கான வரி ஆலோசனைச் சேவைகளை வழங்குவதுடன் வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனியின் கணக்காய்வாளராகவும் உள்ளது. மீளாய்வாண்டில் ஏர்ன்ஸ்ட் என்ட் யங், பட்டயக்கணக்காளர் வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனியின் கணக்காய்வாளராக செயற்பட்டனர். மேற்குறிப்பிட்ட வரி ஆலோசகர் சேவையினைத் தவிர கம்பனியிலோ அல்லது தொகுதியிலோ எந்தவொரு ஆர்வத்தினையும் கணக்காய்வாளராக இவர்கள் கொண்டிருக்கவில்லை.

மீளளிக்கத்தக்க செலவினம் அடங்கலாக (வரி நீங்கலாக) ரூபா 2,568,000 ஆனதோர் தொகை மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணமாக கம்பனியினால் கணக்காய்வாளர்களிற்குச் செலுத்த வேண்டியிருந்தது.

மீளளிக்கத்தக்க செலவினம் அடங்கலாக (வரி நீங்கலாக) ரூபா 275,990 ஆனதோர் தொகை மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணமாக வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனியின் சார்பில் கணக்காய்வாளர்களிற்குச் செலுத்த வேண்டியிருந்ததுடன் மீளளிக்கத்தக்க செலவினம் அடங்கலாக (வரி நீங்கலாக) ரூபா 99,960 ஆனதோர் தொகை மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணமாக வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனியின் சார்பில் கணக்காய்வாளர்களிற்குச் செலுத்த வேண்டியிருந்தது.

கம்பனியின் கணக்காய்வற்ற கட்டணங்கள் ரூபா 988,847 ஆகக் காணப்பட்டதுடன் அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனியின் கட்டணம் ரூபா 183,672 ஆகும். வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனிக்கு எதுவித கணக்காய்வற்ற கட்டணமும் காணப்படவில்லை.

கணக்காய்வாளர்கள் தமது பதவிகளை தொடர்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர். கணக்காய்வாளர்களை மீள நியமனம் செய்வதற்கான பிரேரணையொன்றும் அவர்களது ஊதியங்களை தீர்மானிப்பதற்கான பணிப்பாளர்களது அதிகாரமும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்படவுள்ளது.

## ஐந்தொகைத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

இந்த நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ தேவையான எந்தவொரு குறிப்பிடத்தக்க நிகழ்வும் அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெற்றிருக்கவில்லை.

பணிப்பாளர் சபையின் சார்பில் தலைவராலும் பணிப்பாளர் சபையின் சார்பாக பனிப்பாளர் ஒருவராலும் இந்த ஆண்டறிக்கையில் கையொப்பமிடப்பட்டது.

தலைவர்

பணிப்பாளர்

வரையறுக்கப்பட்ட பீ.டபிள்யூ கோபரேட் செயலக (தனியார்) கம்பனி
செயலாளர்.

2014 மே 12

# மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்

மனித வளத்தினை மிக முக்கியமான உபாய அலகொன்றாக கம்பனி இனங்கண்டு பயிற்சியும் அபிவிருத்தியும், ஊழியர் நலனோம்பல் மற்றும் ஏனைய சமூக நடவடிக்கைகளின் கீழ் மனித வளத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மீளாய்வாண்டில் தொழில்நுட்ப பதவியணியினருக்கும் நிறைவேற்றுப் பதவியணியினருக்கும் அவர்களது திறன்களையும் குழுவாக செயற்படுதலையும் அதிகரித்துக் கொள்வதற்காக உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இச் செயற்பாடுகளின் குறிக்கோள் தொடர்ச்சியான அடிப்படையில் வணிக உபாயங்களை அடைந்து கொள்வதற்கு மனித வளத்தின் உதவியினை உறுதிப்படுத்துவதாகவும் அவர்களது செயற்பாடுகளிற்கு பெறுமதி சேர்ப்பதில் கருத்துடன் செயற்படுவதாகவும் இருந்தது. மீளாய்வாண்டில் சகல மனிதவளச் செயற்பாடுகளினாலும் ஊழியர் உறவினை மேலும் மேம்படுத்த கம்பனிக்கு முடிந்ததனை மகிழ்ச்சியுடன் நாம் குறிப்பிடுகின்றோம். நீண்டகாலத்திற்குப் பொருந்தக் கூடிய ஊக்குவிப்புத் திட்டமொன்று ஆண்டின்போது அமுல்படுத்தப்பட்டதுடன் ஒரு குறிப்பிட்ட மட்டம் வரையில் ஊழியர் துயர்துடைப்பிற்கான பதவியுயர்வுகள் திருப்தியாக காணப்பட்டன. இதனையொத்த தொழிற்துறைக்கேற்ப ஊழியர்களின் கொள்வனவுச் சக்தியினை அதிகரிக்கும் நோக்குடன் வருடத்தின் ஆரம்பத்தில் சகல நிரந்தரப் பதவியணியினரதும் சம்பளங்கள் 8.5% ஆல் அதிகரிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டளவில் கம்பனி தேசத்திற்கான சேவையின் 30 ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருந்ததுடன் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருந்த ஊழியர்களிற்கு நீண்டகாலச் சேவை விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின் போது ஊழியர்களின் பிள்ளைகளிற்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.
ஊழியர்களிடையே புரிந்துணர்வு/நல்லுறவினை வளர்ப்பதற்காக வருடாந்த நிகழ்வொன்றாக கிளைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியொன்று நாரஹேன்பிட சாலிகா மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந்த நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். 2,000 பேர் அளவில் இதில் பங்குபற்றியிருந்தனர்.

கம்பனியின் ஆதரவுடன் பல்வேறு நலன்புரிச் சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதச் செயற்பாடுகளுடன் ஊழியர்கள் 2014 ஆம் ஆண்டை வரவேற்றனர். ஒரு முழுநாள் இரவு பிரித் ஓதுதலும் ஏனைய மதச் செயற்பாடுகளும் தலைமையகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் தொழில் மனித நேயத்திற்கு பதிலாக வேலைவாழ்வு மனித நேயத்தை கிளைகள் காண்பித்தன.

ஆண்டின்போது கம்பனியின் அனுசரணையுடன் நலன்புரிச் சங்கத்தினால் இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இது மிகவும் வெற்றிகரமான நிகழ்வாக காணப்பட்டது. கம்பனியின் பதவியணியினர் பலம் ஆண்டின் இறுதியில் 1,470 ஆக இருந்தது. புதிய 18 ஆட்சேர்த்தல்கள் பதியப்பட்டதுடன் இது ஓய்வுபெறுதலினாலும் ஏனைய தொழில் தேவைகளினாலும் ஏற்பட்டதாகும். கம்பனியின் முகாமைத்துவம் தொழிற்சங்கங்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுடன் சிறந்த தொழில் உறவினை பேணுவதற்காக அவர்களது ஒத்துழைப்பும் ஆதரவும் பெரிதும் வரவேற்கப்படுகின்றது.

# பொறியியல் பிரிவு

முறைமை அபிவிருத்தித் திணைக்களம், பிரமாண விவகாரங்கள் திணைக்களம் மற்றும் செயற்திட்டத் திணைக்களத்தினை உள்ளடக்கிய பொறியியல் பிரிவிற்கு 2013 ஆக்கத்திறன்மிக்க ஆண்டொன்றாக காணப்பட்டது.

வடிவமைப்பும் அபிவிருத்தியும், கொள்வனவு, தகவல், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை உள்ளடக்கிய முறைமை அபிவிருத்தித் திணைக்களம் பொறியியல் பிரிவின் பிரதான தொழிற்பாட்டு அலகாக காணப்படுகின்றது. கொள்வனவுப் பிரிவு ஏறத்தாழ 600 கொள்வனவுகளை கையாண்டிருந்தது. குறித்துரைப்புகளிற்கு சில பிரதான திருத்தங்கள் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. இருப்புக்களின் கட்டுப்பாட்டிற்கு நிறுவனத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொதி கொள்வனவுத் திணைக்களத்திற்கு உதவியாக இருந்தது.

கட்டுப்பாட்டு நிலைய தன்னியக்க மென்பாகம், வாடிக்கையாளர் சேவைகள் பொதி, சொத்து முகாமைத்துவ பொதி மற்றும் குறுஞ் செய்திச் சேவைப் பொதி போன்ற பல்வேறு உள்ளக அபிவிருத்திகளை தகவல் தொழில்நுட்ப திணைக்களம் மேற்கொண்டிருந்தது. தகவல் தொழில்நுட்ப திணைக்களத்திற்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மென்பாக அபிவிருத்தி செய்தல் உப பிரிவு வாடிக்கையாளரை நோக்கிய உள்ளக முறைமையினை அபிவிருத்தி செய்வதில் பெரு வெற்றி கண்டிருந்தது.

ஏறத்தாழ 1,600 மனித பயிற்சி நாட்களைக் கொண்ட ஏறத்தாழ 140 பயிற்சி நெறிகளை பயிற்சி நிலையம் நடாத்தியிருந்தது. இது ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட 1500 மனித பயிற்சி நாட்களைக் காட்டிலும் மேற்பட்டதாகும். அத்துடன் நிறைவேற்றுப் பதவியினருக்கு பல்வேறு வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்களும் அவ்வாறே வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளும் பயிற்சி திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பரிசோதனைத் திணைக்களம் ஆண்டின் ஒன்பது மாத காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மீற்றர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு உயர் செயலாற்றலை அடைந்திருந்தது. மேலும், உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட தன்னியக்க மானி வாசிப்பு மென்பாகத்தினை அபிவிருத்தி செய்ததமையால் பரிசோதனைத் திணைக்களம் உயர் பெறுபேற்றை காண்பித்தது. தற்போது இந்த மென்பாகத்தினைப் பயன்படுத்தி சகல மானிகளும் தன்னியக்க முறையில் வாசிக்கப்படுகின்றன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரமாணங்கள் திணைக்களம், பிரமாண அலுவல்களை கையாள்வதுடன் பயன்பாட்டு பிரமாணங்களுடன் தொடர்புடைய குறியீடுகளையும் பிரமாணங்களையும் தயாரிப்பதில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு உதவுகின்றது. வழங்கல் சேவைக் குறியீடு, நுகர்வோர் உரிமையும் கடப்பாடுகளும், பாதுகாப்பு, தரமும் தொடர்ச்சியான பிரமாணங்களும் மற்றும் விநியோகச் செயலாற்றல் நியமங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அமுலாக்கல் செயன்முறை கண்காணித்து வரப்படுகின்றது. பிரமாண தகவல் முறைமை பிரமாண அலுவல்களுடன் தொடர்புடைய பெறுமதிமிக்க தகவல்களை வழங்குகின்றது. இவை மாதந்தோறும் பிரமாணங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

செயற்திட்டத் திணைக்களத்திற்கு மிகவும் செயன்முன்னேற்றகரமான ஆண்டாக காணப்பட்டது. பலத்த எதிர்பார்ப்புகளுடன் காணப்பட்ட கட்டுநாயக, கிரிபத்கொட, கொடிகாவத்த, நாவல மற்றும் ஹிக்கடுவ முதற்தர உப மின்நிலைய செயற்திட்டங்கள் அதிகூடிய செயன்முன்னேற்றத்தைக் காண்பித்து 2014 ஆம் ஆண்டின் முதற்பகுதியில் ஐந்து உப மின் நிலையங்களும் செயற்படவுள்ளன.

# விசேட புலனாய்வுப் பிரிவு

## 2013 ஆம் ஆண்டிற்கான விசேட புலனாய்வுப் பிரிவினது செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம்

எமது முறைமையிலிருந்து சட்டவிரோதமாக மின்சாரத்தினைப் பெறுகின்ற நபர்களை கண்டுபிடிப்பதற்கான சுற்றிவளைப்புக்களை பொலிசாரின் உதவியுடன் மேற்கொள்ளுதல் மற்றும் மின்சார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் குற்றம் புரிந்தோரை சட்டத்திற்கு முன் நிறுத்தி தண்டப்பணங்களை அறவிடுதல் போன்ற பிரதான நோக்குடன் 2008 செப்தெம்பர் மாதத்தில் விசேட புலனாய்வுப் பிரிவு லெகோவில் தாபிக்கப்பட்டது.

2013 நவம்பர் வரைக்குமான மீளாய்வாண்டில் இப்பிரிவு வெற்றிகரமான 252 கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு ரூபா 27,666,615.86 வருமானமொன்றை தண்டப்பணமாக சேகரித்திருந்தது. அதற்கும் மேலாக குற்றம் புரிந்தோரை குறித்த நீதவான் நீதிமன்றங்களின் முன்னிறுத்தி மின்சார சட்டத்தின் பிரகாரம் அவர்களிற்கு நியதிச்சட்ட தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டமை காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 1,550,000.00 வருமானம் கிடைத்தது. இப் பிரிவினை தாபித்தது முதல் 2013 நவம்பர் வரை ரூபா 111,663,025.00 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 நவம்பர் வரை வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சி 9.3% ஆக காணப்பட்டது. மின்சார மானிகளை மோசடிக்கு உட்படுத்தியமையால் மின்சாரத்தினை பெற்றுக்கொண்டோரிடமிருந்து இவ்வாறு தண்டப்பணங்களை அறவிடுவதற்கு மின்சாரச் சட்டத்தில் தெளிவான சட்ட ரீதியான ஏற்பாடுகள் காணப்படாதவிடத்தும் இப்பிரிவு இவ்வாறானதோர் வெற்றியினை அடைந்திருந்தது. இவ்வடைவு 2013 யூலையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2013 இன் 31 ஆம் இலக்க திருத்திய சட்டத்தினால் வலுப்பெற்றது.

இந்த பங்களிப்பிற்கு அப்பால் இப்பிரிவு பல்வேறு ஆரம்ப புலனாய்வுகளையும் திருப்திகரமாக மேற்கொள்வதற்க்கு பொறுப்புடையதாக உள்ளதுடன் பணப்பெறுமதியில் கூறப்பட முடியாத வெளியீடான நிறுவனத்தின் ஒழுக்காற்றுச் செயற்பாடுகளில் லெகோவிற்கு உதவுவதற்கும் பொறுப்பாக உள்ளது.

# செயற்பாடுகள் பிரிவு

2013 ஆம் ஆண்டு 1.43% நுகர்வோர் வளர்ச்சியினை பதிவுசெய்து, எமது நுகர்வோர் தளம் 507,986 நுகர்வோரை அணுகியிருந்தது. 1,220,914 MWh மின்சாரத்தினை 4.6% விநியோக நட்டத்துடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு கம்பனிக்கு முடிந்திருந்தது. வகைப்படுத்தல் ரீதியான நுகர்வோர் பலமும் வருடாந்த நுகர்வும் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| கட்டண வகை | வாடிக்கையாளர் எண்ணிக்கை | % | வருடாந்த நுகர்வு kWh | % |
|---|---|---|---|---|
| வீட்டுப்பாவனை | 426,406 | 84.74 | 514,122,304 | 42.11 |
| பொது நோக்கம் | 71,139 | 14.14 | 389,606,051 | 25.98 |
| மத, கைத்தொழில் மற்றும் ஹோட்டேல் | 5,667 | 1.13 | 317,186,500 | 31.91 |

2013 ஆம் ஆண்டின் இறுதியில் விநியோக முறைமைச் சொத்துக்கள் 2,187 விநியோக உப நிலையங்கள் மற்றும் 1,398 மொத்த உப நிலையங்களுடன் HV வழிகள் 1,120 கி.மீ. இனை அடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டில் முறைமைக்குச் சேர்க்கப்பட்ட விநியோகச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 595,390 மில்லியனாகும். லெகோ ஆண்டின்போது 218 தேறிய மின்மானி இணைப்புக்களை வழங்கியிருந்தமையை குறிப்பிடுதல் பெறுமதி மிக்கதாகும்.

புதிய வெளிச்சமூட்டல் வசதிகளை பொருத்தியதன் மூலம் காலிக் கோட்டையிலுள்ள பொது மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு லெகோ பங்களித்திருந்தது. ஹிக்கடுவ கடலோரத்தினை பிரகாசப்படுத்துவதற்காக விளக்குகளைப் பொருத்துதலும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டது. பொதுநலவாய அரசாங்கங்களின் தலைவர்களது சந்திப்பின் ஏற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட விசேட கோரிக்கையின் பிரகாரம் இவை செய்யப்பட்டன.

2013 ஆம் ஆண்டின் இறுதியில் 4.6% விநியோக நட்டத்தினை பேணுவதற்கு லெகோ நடவடிக்கை எடுத்திருந்ததுடன் கிளை ரீதியான நட்டங்களை கட்டுப்படுத்தல் செயற்பாடு அமுல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் வழங்கல் வெளியீட்டுக்கான முறைமைச் சராசரி தடங்கல் கால சுட்டெண் (SAIDI) நுகர்வோர் ஒருவருக்கு 65.4 மணித்தியாலமாக காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் வழங்கல் வெளியீட்டுக்கான முறைமைச் சராசரி தடங்கல் மீடிறன் சுட்டெண் (SAIFI) நுகர்வோர் ஒருவருக்கு 97 வெளியீடாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் SAIDI இன் குறைவு 30% ஆகும். திட்டமிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் தோல்விகள் காரணமாக SAIDI இன் பொழிப்பு கீழே உள்ள உரு 1 இல் தரப்பட்டுள்ளன.




உரு 1

# நிதி மீளாய்வு

அமைப்பின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்காவும் நிதியினை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பகிர்ந்தளித்து பயன்படுத்தும் செயன்முறையுடன் இது தொடர்புபட்டுள்ளது.

நிதிச் செயலாற்றலை அளவிடுகின்ற நிதிசார் மற்றும் நிதிசாராத உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றுகின்ற முறை நிதிசார் பெறுமதியினை உருவாக்குகின்றது என்பது லெகோவின் நம்பிக்கையாகும்.

## நிதிசார் முக்கிய விடயங்கள் (தொகுதி மட்டத்தில்)

| ஆண்டு | | | | |
|---|---|---|---|---|
| **இலாபத்தன்மை** | | | | |
| விற்பனைகள்(ரூபா மில்) | 22,373,120 | 19,761,169 | 19,079,629 | 14,354,489 |
| மொத்த இலாபம் (%) | 13% | 20% | 19% | 11% |
| தேறிய இலாபம் (%) | 1.32% | 10.14% | 10.86% | -4.17% |
| **தொழிற்படு மூலதன முகாமைத்துவம்** | | | | |
| நடப்பு விகிதம் (தடவைகள்) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு | 1.78 | 1.83 | 2.10 | 1.70 |
| விரைவு விகிதம் (தடவைகள்) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு | 1.63 | 1.54 | 1.87 | 1.45 |
| நிலையான சொத்துப் புரள்வு (தடவைகள்) | 2.16 | 1.88 | 2.20 | 1.69 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபம் குறைவடைந்திருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனிக்கு மற்றுமோர் இலாபத்தன்மை ஆண்டாகும். இந்தக் குறைவு மொத்த வழங்கல் கட்டணத்தின் அதிகரிப்பு மற்றும் 2012, 2013 ஆம் ஆண்டுகளிற்காக ஐக்கிய நாடுகள் கட்டண உள்ளடக்கல் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்டதாகும்.

2013 இல் விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 1221 GWh ஆகவும் 2012 இல் 1216 GWh ஆகவும் காணப்பட்டு விற்பனை வளர்ச்சி 0.4% ஆக இருந்தது. சராசரி விற்பனை விலை ரூபா 17.74 ஆகவும் சராசரி கொள்விலை ரூபா 14.45 ஆகவும் காணப்பட்டது.

2013 இல் ரூபா 164 மில்லியன் செயற்பாட்டு இலாபத்தை ஈட்டுவதற்கு லெகோவிற்கு முடிந்திருந்தது. அத்துடன் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து ரூபா 864 மில்லியன் தொகையை ஈட்டுவதற்கு கம்பனிக்கு முடிந்திருந்தது. வெஸ்ட் கோஸ்ட் (தனியார்) கம்பனியின் முதலீடுகளிலிருந்து ரூபா 573 மில்லியன் தொகையும் அன்டெ லெகோ (தனியார்) கம்பனியின் முதலீட்டிலிருந்து ரூபா 3.4 மில்லியன் தொகையும் 2013 ஆம் ஆண்டில் பங்கிலாபமாகப் பெறப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட மீண்டெழும் செலவினப் பாதீட்டிற்குள் தனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கம்பனிக்கு முடிந்திருந்தது. லெகோ சாசிலும் காசுக்கு சமமான விடயங்களிலும் ரூபா 1,105.6 மில்லியன் அதிகரிப்பை உருவாக்கியது.

வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆண்டறிக்கை விருது 2013 இல் 2012 ஆம் ஆண்டிற்கான மின்வலு மற்றும் சக்திவள பிரிவின் கீழ் இணங்கியொழுகுதல் விருதினை வென்றது. 2013 ஆம் ஆண்டிலும் முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினை நாம் பெற்றுக்கொண்டோம்.

எனது அர்ப்பணிப்புள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் வழங்கிய ஆதரவுக்காக எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களது ஒத்துழைப்பின்றி இந்த வெற்றி சாத்தியமில்லை.



# நாம்
# கொண்டாடுகின்றோம்

எமது செயற்பாடுகள் அவ்வாறே எமது சமூக எதிர்பார்ப்புகள் ஊடாக சேவைகளை வழங்குவதற்கும் பெறுமதிமிக்க தீர்வுகளை உருவாக்குவதற்கும் எமது வாடிக்கையாளர் தொகுதியை புரிந்து கொண்டமை எமது அணிக்கு உதவியாக இருந்தமையை

# கூட்டிணைந்த முகாமைத்துவம்



**திரு. சுனில் பெரேரா**
பிரதான நிதி உத்தியோகத்தர்

**திரு. டீ. முனசிங்ஹ**
மனித வளங்கள் மற்றும் நிர்வாக முகாமைத்துவத் தலைவர்

**கலாநிதி. பீ.எஸ்.என். தி சில்வா**
பொறியியல் தலைவர்

**திரு. எச்.என். குணசேகர**
செயற்பாடுகள் தலைவர்

**திரு. எச்.எஸ். சோமதிலக**
பொது முகாமையாளர்

# சிரேஷ்ட முகாமைத்துவம்



திரு. கே.ஜீ. குலரத்ன
செயற்திட்ட முகாமையாளர்

திரு. எஸ்.டீ.சீ. குணவர்தன
முறைமை அபிவிருத்தி
முகாமையாளர்

திருமதி. இசட்.ஏ. பாசித்
முகாமைத்துவக்
கணக்காளர்

திரு. என். ஏகநாயக
பிரதான உள்ளக
கணக்காய்வாளர்

திரு. எச்.எச். சுமனதாச
முறைமைச் செயற்பாடுகள்
முகாமையாளர்

திரு. எஸ்.எல். ஜயசேகர
வாடிக்கையாளர் சேவை
முகாமையாளர்

திரு. மதுர கமகே
பிரமாண முகாமையாளர்



# நாம்
# பரிமாற்றம் செய்கின்றோம்

எமது தடையற்ற வளர்ச்சிப் பாதையில் நாம் எமது வாடிக்கையாளர்களை உயர்நிலைப்படுத்தி புதிய அனுபவங்கள், மேம்பட்ட வாழ்க்கைத்தரம், சமூகங்கள் மற்றும் ஒரே தேசத்தை வழங்குகின்றோம்.

# சுதந்திர கணக்காய்வாளர் அறிக்கை

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் பங்குதாரர்களுக்கு**

## நிதிக்கூற்றுக்கள் மீதான அறிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றக் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி (கம்பனி) மற்றும் கம்பனியினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் (தொகுதி) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை நாம் கணக்காய்வு செய்தோம்.

## நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து, நியாயமாக சமர்பிப்பதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தி வழிநடாத்திச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை தேர்ந்தெடுத்து பிரயோகித்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## கணக்காய்வாளரின் பொறுப்பு

எமது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எமது கணக்காய்வினை நாம் மேற்கொண்டோம். நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனை இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளை தெரிவு அடிப்படையில் பரிசோதனை செய்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள், முக்கிய மதிப்பீடுகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எமது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் கணக்காய்வுப் பணிகளுக்குத் தேவையான போதியளவு தகவல்களும் விளக்கமளிப்புக்களும் எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதற்கமைய எமது அபிப்பிராயத்துக்கு ஏற்ற அடிப்படையொன்று எமது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது என்பது எமது நம்பிக்கையாகும்.

## அபிப்பிராயம் - கம்பனி

எமது பரிசோதனைகளிலிருந்து தென்படுகின்றவாறு கம்பனி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடி கம்பனியின் நிதி நிலவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நாம் அபிப்ராயப்படுகின்றோம்.

## தொகுதி

கம்பனியினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எமது அபிப்பிராயமாகும்.

## ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 152(2) மற்றும் 153(2) முதல் 153(7) வரையான பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என்பது எமது அபிப்பிராயமாகும்.



ஒப்பம்: ஏர்ன்ஸ்ட் என்ட் யாங்

2014 மார்ச் 14
கொழும்பு

# நிதி நிலைமைக் கூற்று

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

| | | தொகுதி | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | குறிப்பு | **2013** | **2012** | **2013** | **2012** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 3 | 10,344,359 | 10,497,255 | 10,307,573 | 10,447,832 |
| கற்புலனாகாத சொத்துக்கள் | 4 | 18,333 | 20,167 | - | - |
| துணைக்கம்பனியில் முதலீடுகள் | 5 | - | - | 31,320 | 56,321 |
| ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் | 6 | 4,255,147 | 5,670,000 | 4,302,232 | 5,717,086 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்** | | **14,617,839** | **16,187,421** | **14,641,125** | **16,221,239** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 7 | 910,839 | 1,068,873 | 807,060 | 840,689 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 8 | 2,886,543 | 2,743,047 | 2,917,056 | 2,750,425 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 6 | 3,351,060 | 351,817 | 3,351,060 | 351,337 |
| காசும் வங்கி மீதிகளும் | 23 | 3,670,689 | 2,595,684 | 3,509,488 | 2,549,060 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **10,819,131** | **6,759,422** | **10,584,664** | **6,491,511** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **25,436,970** | **22,946,843** | **25,225,789** | **22,712,751** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | | |
| **உரிமைத்துவமும் ஒதுக்கங்களும்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 9 | 1,145,067 | 1,145,067 | 1,145,067 | 1,145,067 |
| உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் | 10 | 1,577,874 | 1,577,874 | 1,552,873 | 1,577,874 |
| நிறுவைத்த உழைப்புக்கள் | | 12,642,634 | 12,533,317 | 12,528,503 | 12,432,117 |
| **தாய்க் கம்பனியின் உரிமைத்துவ உடமையாளர்களுக்கு பகிரக்கூடிய உரிமைத்துவம்** | | **15,365,575** | **15,256,258** | **15,226,443** | **15,155,057** |
| **கட்டுப்பாடற்ற வட்டி** | | 56,125 | 44,142 | - | - |
| **மொத்த உரிமைத்துவம்** | | **15,421,700** | **15,300,400** | **15,226,443** | **15,155,057** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டிக் கடன்களும் பெறுவனவுகளும் | 11 | - | 55,169 | - | 55,169 |
| பிற்போட்ட வரிப் பொறுப்பு | 12 | 180,069 | 395,465 | 225,436 | 441,217 |
| நுகர்வோர் பங்களிப்புக்கள் மீது பிற்போட்ட வருமானம் | 13 | 3,254,818 | 3,076,840 | 3,254,818 | 3,076,840 |
| ஊழியர் இளைப்பாற்று நலன்கள் | 14 | 493,687 | 418,569 | 493,311 | 418,277 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **3,928,575** | **3,946,042** | **3,973,565** | **3,991,503** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 15 | 5,800,080 | 2,554,959 | 5,702,547 | 2,422,472 |
| வருமான வரிப் பொறுப்பு | | 215,157 | 1,022,006 | 251,777 | 1,020,921 |
| வட்டிக் கடன்களுக்கான நடப்புத் தொகை | 11 | 71,457 | 123,436 | 71,457 | 122,798 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **6,086,694** | **3,700,401** | **6,025,780** | **3,566,192** |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **25,436,970** | **22,946,843** | **25,225,789** | **22,712,751** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

.............................................

**பிரதான நிதி உத்தியோகத்தர்**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். சபையின் சார்பாக கையொப்பமிட்டவர்கள்

.............................................

**பணிப்பாளர்**

.............................................

**பணிப்பாளர்**

29 முதல் 58 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன. 2014 மார்ச் 14, கொழும்பு

வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகள்

# முற்றுமடங்கிய வருமானக் கூற்று

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | தொகுதி 2013 ரூபா 000 | தொகுதி 2012 ரூபா 000 | கம்பனி 2013 ரூபா 000 | கம்பனி 2012 ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 16 | 22,373,120 | 19,761,169 | 21,660,450 | 18,941,440 |
| விற்பனைக் கிரயம் | | (19,558,568) | (15,861,250) | (18,899,615) | (15,148,014) |
| **மொத்த இலாபம்** | | **2,814,553** | **3,899,920** | **2,760,835** | **3,793,426** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 17 | 580,494 | 462,253 | 570,343 | 454,958 |
| செயற்பாட்டுச் செலவினம் | | (1,728,855) | (1,668,374) | (1,722,344) | (1,631,384) |
| நிர்வாகச் செலவினம் | | (1,465,025) | (1,465,572) | (1,427,739) | (1,402,574) |
| நிதி வருமானம் | 18 | 1,451,314 | 1,213,185 | 1,439,533 | 1,210,811 |
| நிதிக் கிரயம் | 19 | (17,028) | (26,062) | (16,980) | (26,062) |
| **யூஎன்ரீ மற்றும் வரிக்கு முன் இலாபம்** | **20** | **1,635,453** | **2,415,351** | **1,603,648** | **2,399,175** |
| யூஎன்ரீ சீராக்கம் | | (1,692,995) | - | (1,692,995) | - |
| **வரிக்கு முன் இலாபம்** | | **(57,542)** | **2,415,351** | **(89,347)** | **2,399,175** |
| வருமான வரிச் செலவினம் | 21 | 150,699 | (627,319) | 155,728 | (625,120) |
| பிற்போட்ட வரிக் கட்டணம்/(திருப்புதல்) | 21.2 | 215,396 | 215,949 | 215,782 | 170,300 |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | **308,553** | **2,003,981** | **282,163** | **1,944,355** |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | | | |
| விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய மிகை/(நட்டம்) | | - | - | (25,001) | - |
| ஓய்வூதிய நலன்கள் மீதான முதிர்வு (மிகை)/நட்டம் | | (14,016) | - | (14,016) | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | | **294,537** | **2,003,981** | **243,146** | **1,944,355** |
| **பகிர்தல்:** | | | | | |
| தாய்க் கம்பனியின் உரிமைமூலதன உடமையாளர்கள் | | 295,093 | 1,994,255 | | |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 13,460 | 9,726 | | |
| | | **308,553** | **2,003,981** | | |
| **பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு/(நட்டம்)** | 22 | | | 2.12 | 16.98 |

29 முதல் 58 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகள்

# உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | கூறப்பட்ட மூலதனம் ரூபா 000 | வருமான ஒதுக்கம் ரூபா 000 | நிறுத்திவைத்த உழைப்பு ரூபா 000 | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 | கட்டுப்பாடற்ற வட்டி ரூபா 000 | மொத்த உரிமைத்துவம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|---|
| தொகுதி | | | | | | | |
| **2012 சனவரி 01 இல் மீதி** | **1,145,067** | **449,900** | **10,710,822** | **1,127,974** | **13,433,763** | **37,423** | **13,471,186** |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 1,994,255 | - | 1,994,255 | 9,726 | 2,003,981 |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | - | - | - | - | - | - | - |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | **-** | **-** | **1,994,255** | **-** | **1,994,255** | **9,726** | **2,003,981** |
| செலுத்திய பங்கிலாபம் | - | - | (171,760) | - | (171,760) | (3,007) | (174,767) |
| **2012 திசெம்பர் 31 இல் மீதி** | **1,145,067** | **449,900** | **12,533,317** | **1,127,974** | **15,256,258** | **44,142** | **15,300,400** |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 295,093 | - | 295,093 | 13,460 | 308,553 |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | - | - | (14,016) | - | (14,016) | - | (14,016) |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | **-** | **-** | **281,077** | **-** | **281,077** | **13,460** | **294,537** |
| செலுத்திய பங்கிலாபம் | - | - | (171,760) | - | (171,760) | (1,476) | (173,236) |
| **2013 திசெம்பர் 31 இல் மீதி** | **1,145,067** | **449,900** | **12,642,634** | **1,127,974** | **15,365,575** | **56,125** | **15,421,701** |

**கம்பனி**

| | கூறப்பட்ட மூலதனம் ரூபா 000 | வருமான ஒதுக்கம் ரூபா 000 | நிறுத்திவைத்த உழைப்பு ரூபா 000 | விற்பனைக்காக உள்ள ஒதுக்கம் ரூபா 000 | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| 2012 சனவரி 01 இல் மீதி | 1,145,067 | 449,900 | 10,660,336 | - | 1,127,974 | 13,383,277 |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 1,944,355 | - | - | 1,944,355 |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | - | - | (813) | - | - | (813) |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | **-** | **-** | **1,943,542** | **-** | **-** | **1,943,542** |
| செலுத்திய பங்கிலாபம் | - | - | (171,760) | - | - | (171,760) |
| **2012 திசெம்பர் 31 இல் மீதி** | **1,145,067** | **449,900** | **12,432,117** | **-** | **1,127,974** | **15,155,058** |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 282,163 | - | - | 282,163 |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | - | - | (14,016) | (25,001) | - | (39,017) |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | **-** | **-** | **268,147** | **(25,001)** | **-** | **243,146** |
| செலுத்திய பங்கிலாபம் | - | - | (171,760) | - | - | (171,760) |
| **2013 திசெம்பர் 31 இல் மீதி** | **1,145,067** | **449,900** | **12,528,503** | **(25,001)** | **1,127,974** | **15,226,443** |

29 முதல் 58 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.
2014 மார்ச் 14, கொழும்பு.

வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகள்

# காசுப் பாய்ச்சல் கூற்று

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | தொகுதி 2013 | தொகுதி 2012 | கம்பனி 2013 | கம்பனி 2012 |
|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| விரிக்கு முன் இலாபம்/(நட்டம்) | | (57,542) | 2,415,351 | (89,347) | 2,399,175 |
| **சீராக்கல்கள்** | | | | | |
| பொறி, ஆதனம் மற்றும் உபகரண பெறுமானத்தேய்வு | 3 | 848,257 | 831,771 | 836,057 | 820,434 |
| கற்புலனாகா சொத்துக் குறைவு | | 1,881 | 1,881 | - | - |
| நிதி வருமானம் | 18 | (1,451,314) | (1,213,185) | (1,439,533) | (1,210,811) |
| பொறி, ஆதனம் மற்றும் உபகரண விற்பனை இலாபம் | 16 | (20,760) | (13,930) | (20,760) | (13,930) |
| நிதிக் கிரயம் | 19 | 17,028 | 26,062 | 16,981 | 26,062 |
| நுகர்வோர் பங்களிப்பு காலக்கழிவு | 16 | (266,804) | (135,661) | (266,804) | (135,661) |
| பிற்போட்ட இளைப்பாற்று நலத்திட்ட ஏற்பாடுகள் | 13 | 71,134 | 66,126 | 69,732 | 66,107 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | **(858,120)** | **1,978,414** | **(893,675)** | **1,951,375** |
| இருப்புக்கள் (அதிகரித்தல்)/குறைதல் | | 158,035 | (248,766) | 33,630 | (242,663) |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் (அதிகரித்தல்)/குறைதல் | | (143,496) | (1,132,625) | (166,631) | (1,151,966) |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் (அதிகரித்தல்)/குறைதல் | | (2,999,243) | 24,098 | (2,999,723) | 19,960 |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் அதிகரித்தல்/(குறைதல்) | | 3,245,121 | 138,131 | 3,280,075 | 199,368 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக்கப்பட்ட காசு** | | **(597,703)** | **759,252** | **(746,325)** | **776,074** |
| செலுத்திய வட்டி | | (17,028) | (26,062) | (16,981) | (26,062) |
| பிற்போட்ட இளைப்பாற்று நலத்திட்ட கொடுப்பனவுகள் | | (10,032) | (14,905) | (8,713) | (14,905) |
| செலுத்திய வருமான வரி | | (656,150) | (644,745) | (613,416) | (640,708) |
| செலுத்திய முத்திரைத் தீர்வை | | - | (150) | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(1,280,913)** | **73,389** | **(1,385,434)** | **94,398** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| பொறி, இயந்திரம் மற்றும் உபகரணங்களின் தேறிய கையேற்பு மற்றும் அகற்றல்கள் | | (674,646) | (601,170) | (675,036) | (592,301) |
| ஏனைய முதலீடுகளில் முதலீடு/(சேகரிப்புகள்) | | 1,414,853 | (2,968,000) | 1,414,853 | (2,968,000) |
| நடைமுறையல்லாத துணைக்கம்பனிகளில் முதலீடு | | - | - | - | (25,000) |
| பெற்ற வட்டி | | 1,451,314 | 1,213,185 | 1,439,533 | 1,210,811 |
| பெறப்பட்ட நுகர்வோர் பங்களிப்புகள் | | 444,782 | 425,079 | 444,782 | 425,079 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **2,636,303** | **(1,930,906)** | **2,624,133** | **(1,949,410)** |
| **நிதி நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| செலுத்திய பங்கிலாபம் | | (173,236) | (174,767) | (171,760) | (171,760) |
| சாதாரணப் பங்கு வழங்கல் | | - | - | - | - |
| செலுத்திய வட்டிக் கடன்களும் பெறுவனவுகளும் | 10 | (76,566) | (77,422) | (76,566) | (77,422) |
| **நிதி நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(249,802)** | **(252,189)** | **(248,326)** | **(249,182)** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றினது தேறிய அதிகரிப்பு/குறைவு** | | **1,105,588** | **(2,109,706)** | **990,372** | **(2,104,195)** |
| **வருட ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை** | | **2,549,671** | **4,659,377** | **2,503,684** | **4,607,879** |
| **வருட முடிவிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 23 | **3,655,258** | **2,549,671** | **3,494,057** | **2,503,684** |

29 முதல் 58 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

# நாம் வழங்குகின்றோம்

வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட மின்சார விநியோகத்தரான நாங்கள் உரிய வேளையில் திருப்திகரமாக ஒவ்வொரு தூரத்திலுமான நுகர்வோருக்கு தனிப்பட்ட தீர்வுகளை வழங்குகின்றோம்.



## 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

### 1.1 பொதுவானவை

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி வரையறுத்த பொறுப்புடைய கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதாகும். கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 411, ஈ.எச். கூரே கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ளது.

### 1.2 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி (கம்பனி) மற்றும் இதனுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ள அதன் எல்லா உப கம்பனிகளினதும் (தொகுதி) நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளது.

### 1.3 அடிப்படைத் தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

மீளாய்வாண்டில், இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்து காலி, களுத்துறை, மொரட்டுவை, களனி, நுகேகொட, கோட்டே மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கம்பனியின் கிளைகளினூடாக உள்நாட்டு மற்றும் கைத்தொழில் பாவனையாளர்களிற்கு சில்லறையாக விற்பனை செய்தல் கம்பனியின் அடிப்படைத் தொழிற்பாடாக அமைந்திருந்தது.

துணைக் கம்பனிகளும் அவற்றின் அடிப்படைச் செயற்பாடுகளும் வருமாறு:

| கம்பனி | செயற்பாடு |
|---|---|
| வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி | நாட்டில் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். |
| வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி | இலங்கை மற்றும் ஏற்றுமதி சந்தையின் இலத்திரனியல் மீற்றர் தேவையினை சமாளிப்பதற்காக சக்திவள மீற்றர் உற்பத்தி வசதியினை உருவாக்குதல். |

### 1.4 தாய்க் கம்பனி மற்றும் முடிவான தாய்க் கம்பனி

கம்பனியின் தாய்க் கம்பனி 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தினால் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை மின்சார சபையாக காணப்படுகின்றது.

### 1.5 பிரசுரிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை பிரசுரிப்பதற்காக, 2014 மார்ச் 14 ஆந் திகதி பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு அமைய அதிகாரம் வழங்கப்பட்டது.

## 2. பொதுவான கொள்கைகள்

### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) ஆகியவற்றின் பிரகாரம் தொகுதியின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.

தொகுதியின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் அட்டுறு முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன. தொகுதியின் தொழிற்பாட்டு சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்டுக் கூறப்படாத சந்தர்ப்பங்கள் தவிர்த்து ஏனைய நிலைமைகளில் தொகைகள் கிட்டிய ஆயிரத்திற்கு (ரூபா 000) மட்டந்தட்டப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவானதாக உள்ளது.

### 2.1.1 தொடந்தியங்குதல்

கம்பனியின் தொடர்ந்தியங்கும் ஆற்றல் பணிப்பாளர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் கம்பனியை கலைப்பதோ அல்லது வியாபாரத்தை நிறுத்துவதோ அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கவில்லை.

### 2.1.2 ஒன்றிப்பின் அடிப்படை

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தொகுதியினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளது.

தாய்க் கம்பனியின் அறிக்கையிடல் திகதி எதுவோ அத்திகதியிலேயே துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பாக கூறப்படாத சந்தர்ப்பங்கள் தவிர்த்து தொகுதியின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கியதாக உள்ளது.

தொகுதிகளுக்கிடையிலான சகல மீதிகளும், வருமானங்கள் மற்றும் செலவினங்களும், தொகுதிக்கிடையிலான/ கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான மிகை/நட்டங்களும் முழுமையாக நீக்கப்பட்டன.

தொகுதியின் கட்டுப்பாட்டிற்கு வந்திருந்த திகதியிலிருந்து கையேற்கப்பட்ட திகதி முதல் துணைக்கம்பனிகள் முழுமையாக ஒன்றிணைப்புச் செய்யப்பட்டதுடன் அக்கட்டுப்பாடு இல்லாதொழியும் வரைக்கும் தொடர்ச்சியாக ஒன்றிணைந்து காணப்படும். கணக்கீட்டுக் கொள்கைகளை நிலையானதாகப் பயன்படுத்தி தாய்க் கம்பனியின் அறிக்கையிடல் திகதி எதுவோ அத்திகதியிலேயே துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. தொகுதிகளுக்கிடையிலான சகல மீதிகளும், கொடுக்கல் வாங்கல்களும், தொகுதிக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான மிகைகளும் நட்டங்களும் முழுமையாக நீக்கப்பட்டன.

துணைக்கம்பனியின் நட்டங்கள் பற்றாக்குறை மீதியில் விளைவினை ஏற்படுத்துமாயின் கட்டுப்பாடற்ற வட்டிக்குப் பகிரப்பட்டன.

கட்டுப்பாடற்ற நட்டமொன்றினால் துணைக் கம்பனியொன்றின் உரிமைத்துவ வட்டியிலான மாற்றமொன்று உரிமைத்துவ கொடுக்கல் வாங்கலொன்றாக கணக்கீடு செய்யப்பட்டது. துணைக்கம்பனியொன்றால் தொகுதியின் நட்டங்கள் கட்டுப்படுத்தப்படின் அது:

- துணைக்கம்பனியின் சொத்துக்கள் (நன்மதிப்பு அடங்கலாக) மற்றும் பொறுப்புக்களாக மீள அங்கீகரிக்கப்படுகின்றன.
- எந்தவொரு கட்டுப்பாடற்ற வட்டியினதும் முன்னொண்டு செல்லும் தொகை மீள அங்கீகரிக்கப்படுகின்றன.
- உரிமைத்துவத்தில் பதிவுசெய்யப்பட்ட திரண்ட மொழிபெயர்த்தல் வேறுபாடுகள் மீள அங்கீகரிக்கப்படுகின்றன.
- கருத்திற்கொள்ளப்பட்ட பெறுகைகளின் நியாயப் பெறுமதி அங்கீகரிக்கப்படுகின்றன.
- ஏதேனும் முதலீட்டு நிறுத்தி வைத்தல்களின் நியாயப் பெறுமதி அங்கீகரிக்கப்படுகின்றன.
- எந்தவொரு மேலதிகம் அல்லது பற்றாக்குறை இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.
- இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அல்லது நிறுத்தி வைத்த உழைப்புக்களிற்கான ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தாய்க்கம்பனிக் கூறுகளின் பங்கு பொருத்தமான விதத்தில் மீள வகைப்படுத்தப்படுகின்றன.

**பின்வரும் கம்பனிகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.**

வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி
வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி

## 2.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.2.1 வருமானத்தை அங்கீகரித்தல்

கொடுப்பனவு செய்யும் வேளையினைக் கருத்திற்கொள்ளாது தொகுதிக்கு பொருளாதார நலன்களை உட்பாய்ச்சுவதற்கான சாத்தியம் மற்றும் வருமானத்தை நம்பகரமாக அளவிட முடியுமாயிருப்பின் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. வியாபாரக் கழிவுகள் மற்றும் வரிகளைக் கழித்து பெற்ற அல்லது பெறவேண்டியவற்றைக் கருத்திற்கொண்டு நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

பின்வரும் குறித்துரைத்த அங்கீகரிக்கும் நியதிகள் வருமானத்தினை அங்கீகரிக்க முன்னர் கட்டாயமாக அடையப்பட்டிருத்தல் வேண்டும்.

#### (a) பொருட்கள் விற்பனை

வழமையாக பொருட்களின் ஒப்படைத்தலின் போது கொள்வனவாளருக்கு குறிப்பிடத்தக்க இடர்களும் பொருட்களின் உரிமைத்துவ வெகுமதிகளும் மாற்றப்படுகையில் பொருட்கள் விற்பனையிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### (b) சேவைகளை வழங்குதல்

சேவைகள் வழங்கப்படுகையில் அல்லது ஆற்றப்படுகையில் கணக்கீட்டுக் காலப்பகுதியில் சேவைகளின் வழங்கலிருந்தான வருமானங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### (c) வட்டி வருமானம்

சகல நிதிக் கருவிகளும் முதிர்வுக் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்கள் விற்பனைக்கு உள்ளவையாக வகைப்படுத்தப்பட்டன. வட்டி வருமானம் அல்லது செலவினம் எதிர்காலக் காசுச் செலுத்துகைகள் அல்லது பெறுகைகளை உள்ளபடியாக கழிவுசெய்யும் வீதமான தாக்கமுள்ள வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி பதிவுசெய்யப்படுகின்றது. இது நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் தேறிய முன்னொண்டு செல்லும் தொகைக்காக நிதிச்சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் அல்லது ஒரு குறுங்காலம் என்பவற்றில் பொருத்தமான முறையின் ஊடாக இடம்பெறுகின்றது. வட்டி வருமானம், வருமானக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

#### (d) பங்கிலாபம்

கொடுப்பனவினை பெறுவதற்கான உரித்து தொகுதிக்கு ஏற்படுகையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### (e) ஏனையவைகள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.2.2 அந்நியச் செலாவணி

தொகுதியின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தாய்க் கம்பனியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு துணை நிறுவனத்திற்குமான தொழிற்பாட்டு நாணயத்தினை தொகுதி தீர்மானிப்பதுடன் ஒவ்வொரு துணைக் கம்பனியினதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள விடயங்களை அந்த நாணயத்தினை பயன்படுத்தி அளவிடுகின்றது. தொகுதி நேரடி ஒன்றிணைத்தல் முறையினை பயன்படுத்துவதுடன் இந்த முறையிலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் மீள்சுழற்சிக்காக தெரிவு செய்யப்படுகின்றது.

#### (a) கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்ற திகதியில் நிலவிய தொழிற்பாட்டு நாணய வீதத்தில் அந்நியச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் ஆரம்பத்தில் கம்பனியினால் பதிவு செய்யப்படுகின்றன.

அந்நியச் செலாவணியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டு செயற்பாடொன்றில் தேறிய முதலீட்டு பகுதியொன்றாக உருவாகும் எல்லா நாணய விடயங்களும் தவிர்ந்த சகல வேறுபாடுகளும் வருமானக் கூற்றிற்கு எடுக்கப்படுகின்றன. இவை இலாபம் அல்லது நட்டமாக மீளவகைப்படுத்தப்படும் நேரத்தில் தேறிய முதலீடுகள் விற்கப்படும் வரை ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நாணயப் பரிமாற்று வேறுபாடுகளிற்கு பகிரப்படக்கூடிய வரிக் கட்டணங்களும் செலவு வைத்தல்களும் அதன் மீதான நாணய விடயங்களும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் பதியப்படுகின்றன.

அந்நியச் செலாவணி ஒன்றில் வரலாற்றுக் கிரயத்தின் பிரகாரம் அளவிடப்படுகின்ற நிதியல்லாத விடயங்களின் பெறுமதி, கொடுக்கல்வாங்கலின் தொடக்கத் திகதியில் காணப்பட்ட பரிமாற்று வீதங்களைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. அந்நியச் செலாவணி ஒன்றினால் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியல்லாத விடயங்கள் சந்தைப் பெறுமதி, கணிப்பிடப்பட்ட திகதியில் நிலவிய பரிமாற்று வீதத்தில் மாற்றப்படுகின்றன.

நிதியல்லாத விடயங்களின் மாற்றீடு செய்தலால் எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் அந்த விடயத்தின் இலாபம் அல்லது நட்ட அடிப்படையில் பரிமாற்று வீதம் வழங்கிய வேறுபாடாக அங்கீகரிக்கப்படுகின்றது. (விடயங்களின் இலாபம் அல்லது நட்டத்தின் மீதான பரிமாற்று வேறுபாடுகள் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன)

### 2.2.3 வரியியல்

#### a) நடப்பு வரி

நடப்பாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான நடப்பு வருமான வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அல்லது அவருக்குச் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற தொகையின் படி கணிக்கப்படுகின்றன. தொகைகளை கணிப்படுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற வரி வீதங்களும் சட்டங்களும் கம்பனி வரி விதிக்கத்தக்க வருமானத்தினை நிச்சயிக்கின்ற அவ்வாறான திகதியில் நாட்டில் நிலவுகின்ற சட்டங்கள் விதிகளுடன் ஏற்புடையதாக இருக்கும். விடயங்களுடன் தொடர்புடைய நடப்பு வருமான வரி வருமானக் கூற்றில் அல்லாது நேரடியாக தாக்கத்திற்குட்பட்ட உரிமைத்துவத்திற்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறு வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் அடிப்படையாவதுடன் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவாக கணிப்பிடப்பட்டுள்ளது.

#### b) பிற்போட்ட வரிகள்

பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்களின் அடிப்படையிலமைந்த வரிக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களிற்காக முன்கொண்டு சென்ற தொகைக்கும் இடையில் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற சகல தற்காலிக வேறுபாடுகளையும் பிற்போட்ட வருமான வரி தந்துள்ளது.

பிற்போட்ட வருமான வரிப் பொறுப்புக்கள் பின்வருவன நீங்கலாக எல்லா வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளிற்காகவும் அங்கீகரிக்கப்படுகின்றன.

i) வணிக செயற்பாடற்ற நாணய பரிமாற்றத்தினால் சொத்து அல்லது பொறுப்பொன்றின் ஆரம்ப அங்கீகரிப்பிலிருந்தும் கொடுக்கல் வாங்கல் நியதியிலும் எழுகின்ற பிற்போட்ட வருமான வரிப் பொறுப்பாக காணப்பட்டு கணக்கீட்டு இலாபத்திற்கு அல்லது வரிவிதிக்கக் கூடிய இலாபம் அல்லது நட்டத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தாதிருப்பின்

ii) தற்காலிக வேறுபாடுகளின் மீளமைத்தலை கட்டுப்படுத்த முடியுமான நேரம் மற்றும் தாக்கமுள்ள எதிர்காலத்தில் தற்காலிய வேறுபாடுகளை மாற்றியமைக்க முடியாத சாத்தியம் காணப்படுதல் நீங்கலாக துணைக்கம்பனி, ஒருங்கிணைந்த கம்பனிகள் ஆர்வமுடைய கூட்டு முயற்சிகளின் முதலீடுகளுடன் இணைந்த வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுடன் தொடர்புற்றிருப்பின்

பின்வருவன நீங்கலாக கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தப்படாத முன்கொண்டு செல்லப்பட்ட வரிச் செலவு வைத்தல்கள் மற்றும் பயன்படுத்தப்படாத விரி நட்டங்களிற்கு எதிராக வரி விதிக்கத்தக்க இலாபம் காணப்படும் நிலமைகளில் எல்லா கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தப்படாது முன்கொண்டு செல்லப்பட்ட வரிச் செலவு வைத்தல்கள் மற்றும் பயன்படுத்தப்படாத விரி நட்டங்களுக்காக பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

i) வணிக செயற்பாடற்ற நாணய பரிமாற்றத்தினால் சொத்து அல்லது பொறுப்பொன்றின் ஆரம்ப அங்கீகரிப்பிலிருந்தும் கொடுக்கல் வாங்கல் நியதியிலும் எழுகின்ற கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுடன் தொடர்புடைய பிற்போட்ட வருமான வரிச் சொத்தாக காணப்பட்டு கணக்கீட்டு இலாபத்திற்கு அல்லது வரிவிதிக்கக் கூடிய இலாபம் அல்லது நட்டத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தாதிருப்பின்

ii) தற்காலிக வேறுபாடுகளின் மீளமைத்தலை கட்டுப்படுத்த முடியுமான நேரம் மற்றும் தாக்கமுள்ள எதிர்காலத்தில் தற்காலிக வேறுபாடுகளை மாற்றியமைக்க முடியாத சாத்தியம் காணப்படுதல் நீங்கலாக துணைக்கம்பனி, ஒருங்கிணைந்த கம்பனிகள் மற்றும் ஆர்வமுடைய கூட்டு முயற்சிகளின் முதலீடுகளுடன் கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் தொடர்புற்றிருப்பின்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் முன்கொண்டு செல்லப்படுகின்ற பிற்போட்ட வரிமான வரி சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு, பயன்படுத்தவதற்கான பிற்போட்ட வருமானவரிச் சொத்துக்களின் முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பகுதியையோ அனுமதிப்பதற்கு போதுமான வரிவிதிக்கத்தக்க இலாபம் நீண்டகாலத்தில் சாத்தியமற்றதாக காணப்படின் அது குறைக்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்படாத பிற்போட்ட வரிமான வரி சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, எதிர்கால இலாபம் பிற்போட்ட வரிமான வரி சொத்தினை அறவிடுவதற்காக அனுமதிப்பதற்கு சாத்தியமானதாக இருப்பின் அங்கீகரிக்கப்படுகின்றது.

தொகைகளை கணிப்படுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற செல்லுபடியாகவுள்ள வரி வீதங்களிலும் சட்டங்களிலும் உள்ள வரி வீதங்களின் அடிப்படையில் சொத்துக்கள் தேறப்படுகின்ற அல்லது பொறுப்புக்கள் தீர்க்கப்படுகின்ற வேளையில் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கும் வரி வீதங்களில் பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அளவிடப்படுகின்றன.

விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரி ஏனைய முற்றுமடங்கிய வருமனம் அல்லது நேரடியாக உரிமைத்துவத்தில் குறித்த கொடுக்கல்வாங்கலுடன் கொண்டுள்ள இணைவுக் குணகத்தின் படி அங்கீகரிக்கப்படுகின்றது.

குறித்த வரிவிதிக்கத்தக்க நிறுவனம் அல்லது அதிகாரத்தரப்பிற்கு பிற்போட்ட வரிகள் தொடர்புபட்டுக் காணப்படின் நடப்பு வருமான வரிப் பொறுப்பிற்கு எதிராக நடப்பு வருமான வரிச் சொத்துக்களை எதிரீடு செய்வதற்காக சட்டரீதியான பின்னணி காணப்படுமாயின் பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன.

#### c) பங்கிலாப வருமானம் மீதான வரி

துணைக் கம்பனிகளிலிருந்தான பங்கிலாபங்கள் மீதான வருமான வரி ஒன்றித்த வருமானக் கூற்றில் செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.2.4 பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்

திரண்ட பெறுமானத்தேய்வைக் கழித்த பின்னர் தேறிய பெறுமதிக்கு மற்றும் அல்லது திரண்ட காலக்கழிவு நட்டமேதேனும் இருப்பின் அவற்றையும் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள் வெளிப்படுத்துகின்றன. அவ்வாறான கிரயத்தினுள் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களிற்காக பதிலீடு செய்யப்பட்ட கூறுகளின் கிரயம் மற்றும் நீண்டகால நிர்மாணச் செயற்திட்டங்களிற்கான கடன் பெறல் கிரயங்களை இனங்காண்பதற்கான நியதிகள் காணப்படுமாயின் அவையும் உள்ளடக்கப்படுகின்றது. இடைக்காலத்தில் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதிகள் பதிலீடு செய்யப்படுமாயின் பதிலீடு செய்யப்பட்ட பகுதிகள் தேறிய புத்தகப் பெறுமதியுடன் இனங்காணப்படாததுடன் புதிய பகுதிகள் அதனுடன் தொடர்புடைய பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வுடன் அங்கீகரிக்கப்படுகின்றன.

அவ்வாறே முக்கியமான பரிசோதனைகள் செய்யப்படுமிடத்து அங்கீகரிக்கப்படுவதற்கான நியதி திருப்திகரமாக காணப்படுமாயின் பதிலீடு செய்தலாக அதன் கிரயம் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏனைய அனைத்து திருத்த மற்றும் பராமரித்தல் கிரயங்கள் இடம்பெற்றவாறு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பொறி, ஆதனம் மற்றும் உபகரண விடயங்களை பின்னர் மீள் மதிப்பீடு செய்கையில், அந்த முழுமையான சொத்துக்கள் வகுப்பும் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதிகரிப்புக்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அச்சொத்தின் மீள்மதிப்பீட்டுக் குறைவுகள் மீளாய்வாண்டில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றிலும் திரட்டிய உரிமைத்துவத்தின் எந்தவொரு மிகையிலும் அங்கீகரிக்கப்படுகின்றன. சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தனியொரு சொத்தின் மீது காணப்படுகின்ற மிகையினை பிரதியீடு செய்தல் தவிர்ந்த மீள்மதிப்பீட்டு பற்றாக்குறை வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

மீள் மதிப்பீட்டுத் திகதியிலான திரட்டிய தேய்வு, சொத்தின் மொத்த முன்கொண்டு செல்லப்படுகின்ற பெறுமதிக்கு எதிராக அகற்றப்படுவதுடன் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு தேறிய தொகை மீண்டும் காண்பிக்கப்படுகின்றது. அகற்றலின் போது அந்த விசேட சொத்திற்கு ஏதேனும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் காணப்படுமாயின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிற்கு மாற்றப்படுகின்றது.

சகல பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் எளிய முறையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு பெறுமானத்தேய்வு இடப்படுகின்றது.

தொகுதியினால் பயன்படுத்தப்படுகின்ற பிரதான வருடாந்த பெறுமானத்தேய்வு வீதங்கள் வருமாறு

| | |
|---|---|
| இறையில் கட்டிடங்கள் | 2.5% |
| **உட்கட்டமைப்பு வழங்கல்** | |
| உப-நிலையங்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகளாலும் சீஈபீ இனாலும் நிர்மாணிக்கப்பட்ட மேல் கம்பிவழிகளும் சேவை வழிகளும் | 10% |
| உப-நிலையங்கள், லெகோ இனால் நிர்மாணிக்கப்பட்ட மேல் கம்பிவழிகளும் சேவை வழிகளும் | 4% - 5% |
| மோட்டார் வாகனங்கள் | 15% |
| கணனிகள் | 20% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| பொறியும் இயந்திரங்களும் | 25% |

தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களினதும் எந்தவொரு முக்கிய பகுதி, அகற்றலின் போது அல்லது எதிர்காலப் பொருளாதார நலன்கள், அதனைப் பயன்படுத்துவதனால் அல்லது அகற்றுவதனால் எதிர்பார்க்கப்படாத வேளையில் அங்கீகரிக்கப்படுவதில்லை. சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாமையால் எழுகின்ற எந்தவொரு இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனையால் கிடைத்த தொகைக்கும் சொத்துக்களின் முன்கொண்டு சென்ற தொகைக்குமிடையிலான வேறுபாடாக கணிப்பிடப்பட்ட) சொத்தில் அங்கீகரிக்கப்படாத வேளையில் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

### 2.2.5 குத்தகை

வேலைத்திட்டமொன்று அல்லது உள்ளடக்கும் விடயங்கள் என்ற தீர்மானத்தின் படி தொடக்கத் திகதியிலான வரைவிலக்கணம் குத்தகைக்கான அடிப்படையாகும். விசேட சொத்தொன்று அல்லது சொத்தின் பயன்படுத்தலின் மீது வேலைத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக தங்கியிருத்தல் அல்லது சொத்தினை பயன்படுத்தும் உரித்தினை வேலைத்திட்டம் கொண்டு வருகின்றதா என்ற விடயம் வேலைத்திட்டத்தில் வெளிப்படுத்தப்படாவிடினும் வேலைத்திட்டம் மதிப்பாய்வு செய்யப்படும்.

#### செயற்பாட்டுக் குத்தகை

குத்தகைக் காலத்தின் அடிப்படையில் எளிய முறையினைக் கையாண்டு செயற்பாட்டுக் குத்தகைக் கொடுப்பனவு வருமானக் கூற்றில் செயற்பாட்டுச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.2.6 கடன்பெறுதல் கிரயம்

சொத்தொன்றினை கையேற்றல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்வதற்காக கடன்பெறுதல் கிரயம் நேரடியாக அங்கீகரிக்கப்படுவதுடன் அதன் மூலம் கருதப்பட்ட பயன்பாடு அல்லது விற்பனைக்காக தயார்படுத்துவதற்கு குறிப்பிட்டளவு காலம் தேவைப்படுவதுடன் குறித்த சொத்துக்களின் கிரயத்தின் பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்துக் கடன் பெறல் கிரயங்களும் அது இடம்பெறும் காலப்பகுதியில் செலவாக காட்டப்படுகின்றது. கடன்பெறல் கிரயமானது வட்டி மற்றும் நிதியங்களை கடனுக்குப் பெறுதல் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய கிரயங்களையும் உள்ளடக்கியதாகும்.

### 2.2.7 கற்புலனாகாச் சொத்துக்கள்

தனியாக ஈட்டப்பட்ட கற்புலனாகாச் சொத்துக்கள் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டவாறு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. தொழில்முயற்சிகள் ஒன்றிணைகையில் ஈட்டப்பட்ட கற்புலனாகாச் சொத்துக்களின் கிரயங்கள் கையேற்கப்பட்ட திகதியில் காணப்பட்ட அவற்றின் சாதாரண பெறுமதியாகும். ஆரம்பத்தில் இனங்காணப்பட்டவாறு கற்புலனாகாச் சொத்துக்கள் திரட்டிய பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட கிரயத்திலும் திரண்ட காலக்கழிவு நட்டம் காணப்படின் அதற்கமைய முன்கொண்டு செல்லப்படுகின்றது. மூலதன அபிவிருத்திக் கிரயந் தவிர்ந்த உள்ளக ரீதியாக எழுகின்ற கற்புலனாகாத சொத்துக்கள், மூலதனமாக்கப்படாதிருப்பதுடன் செலவானது ஏற்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் காண்பிக்கப்படுகின்றது.

கற்புலனாகாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வரையறுக்கப்பட்டதாகவோ அல்லது முடிவற்றதாகவோ மதிப்பிடப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட கற்புலனாகாச் சொத்துக்கள் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுவதுடன் கற்புலனாகாச் சொத்துக்கள் காலக்கழிவு நட்டத்திற்குள்ளாகும் நிலமை காணப்படின் காலக்கழிவிற்காக மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட கற்புலனாகாச் சொத்துக்களிற்காக பெறுமானத்தேய்விடும் காலப்பகுதியும் பெறுமானத்தேய்வும் குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் அல்லது எதிர்கால பொருளாதார நலன், பயன்படுத்தல் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட காலத்திலான மாற்றங்கள் ஏற்ற விதத்தில் பெறுமானத் தேய்விடும் காலப்பகுதியையோ அல்லது முறையினை மாற்றுவதன் மூலமோ கணக்கீடு செய்யப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளினாலான மாற்றங்களாக கருதப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட கற்புலனாகாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வுச் செலவினம், வருமானக்கூற்றில் கற்புலனாகாச் சொத்தின் கருமத்துக்கு இணையாக செலவின வகையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

வரையறுக்கப்படாத ஆயுட்காலத்தைக் கொண்ட கற்புலனாகாச் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படாத போதிலும், வருடந்தோறும் காலக்கழிவிற்காக தனித்தனியாக அல்லது நிதி ஈட்டப்படுகின்ற அலகின் மட்டத்தில் பரீட்சிக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலம் ஆதாரமாக இருப்பதற்காக பேணிச்செல்லப்படுதல் வேண்டுமா என்பதனைத் தீர்மானிப்பதற்காக வரையறுக்கப்படாத ஆயுட்காலத்தினை மதிப்பீடு செய்தல், வருடந்தோரும் மீளாய்வு செய்யப்படுகின்றது. அவ்வாறில்லையாயின், பயனுள்ள ஆயுட்காலம் வரையறுக்கப்படாததிலிருந்து வரையறுக்கப்பட்டதாக மாற்றப்படுவதற்கான அடிப்படையொன்றின் மீது மேற்கொள்ளப்படுகின்றது. கற்புலனாகாச் சொத்தாக அங்கீகரிக்கப்படாமை மீது எழுகின்ற இலாப நட்டங்கள் அகற்றல் பெறுவனவுகளிற்கும் முன்கொண்டு சென்ற தொகைக்குமிடையிலான வேறுபாடாக அளவிடப்பட்டு சொத்தினை இனங்காணாதிருக்கையில் அவை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.2.8 பதிவேட்டுப் பொருட்கள்

கிரயம் மற்றும் தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் பதிவேட்டுப் பொருட்கள் மதிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு உற்பத்திப் பொருளையும் அதனை தற்போதைய இடத்திற்கு கொண்டுவருவதற்கு ஏற்பட்ட கிரயங்களும் நிலைமையும் கீழே காட்டப்பட்டவாறு கணக்கீடு செய்யப்படுகின்றன.

- பொருள் செயற்பாடுகள் மற்றும் பராமரித்தல்கள் - நிறையளிக்கப்பட்ட சராசரி அடிப்படையில் உள்ளபடியான கிரயத்திற்கு
- வழிச்சரக்கு மற்றும் ஏனைய இருப்புக்கள் - உள்ளபடியான கிரயத்தில்

சாதாரண வியாபாரச் செயற்பாடுகளில், முடிவுறுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட கிரயமும் விற்பனை விலையிலிருந்து விற்பனைக்காக மதிப்பிடப்பட்ட கிரயத்தினை கழித்ததன் பின்னர் தேறிய பெறுமதியும் மதிப்பிடப்படுகின்றன.

## 2.2.9 நிதிக் கருவிகள் - ஆரம்ப அங்கீகரிப்பும் அதனைத்தொடர்ந்து அளவிடுதலும்

### i) நிதிச் சொத்துக்கள்

**ஆரம்ப அங்கீகரிப்பும் அதனைத்தொடர்ந்து அளவிடுதலும்**

இலங்கை கணக்கீட்டு நியம இல. 39 இன் படி நிதிச் சொத்துக்களான கடன்களும் பெறவேண்டியவைகளும், முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படுகின்ற முதலீடுகள் மற்றும் விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் என்பன பொருத்தமான முறையில் சந்தைப் பெறுமதியில் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுவதுடன் ஆரம்ப அங்கீகரிப்பில் அந்த நிதிச்சொத்துக்கள் எந்த வகைக்குரியதென தீர்மானிக்கப்படுகின்றது.

ஆரம்ப சகல நிதிச்சொத்துக்களும் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் சந்தைப் பெறுமதியைக் கொண்டிருக்காத முதலீடுகள் கொடுக்கல்வாங்கல் கிரயங்களாக நேரடியாக இலாப நட்டத்தினூடாக பகிரப்படக் கூடியதாகும்.

காசு, குறுங்கால முதலீடுகள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், ஏனைய நிதிச் சொத்துக்கள் போன்றன நிதிச் சொத்துக்களில் உள்ளடங்கியுள்ளன.

**பிந்திய அளவீடுகள்**

நிதிச் சொத்துக்களின் பிந்திய அளவீடுகள் கீழே காட்டப்பட்டவாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

**கடன்களும் பெறவேண்டியவைகளும்**

கடன்களும் பெறவேண்டியவைகளும் நிலையான அல்லது கொடுப்பனவு தீர்மானிக்கப்படக் கூடிய ஆனால் நடப்புச் சந்தையில் விலைகூறப்படாத விலையிடப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர் அந்த நிதிச் சொத்துக்கள் தேறக்கூடிய நட்டத்தினைக் கழித்ததன் பின்னர் பயனுள்ள வட்டிவீத முறையினைப் (EIR) பயன்படுத்தி முதிர்ச்சிக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கொள்வனவின் போதான கழிவு அல்லது வட்டம் மற்றும் EIR இன் ஒரு பகுதியாகவுள்ள கட்டணம் அல்லது கிரயங்களைக் கருத்திற்கொண்டு முதிர்ச்சிக் கிரயம் கணிக்கப்படுகின்றது. EIR இன் முதிர்ச்சிக் கிரயம் வருமானக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முதிர்ச்சிக் கிரயத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**விற்பனைக்காக காணப்படுகின்ற நிதி முதலீடுகள்**

விற்பனைக்காக காணப்படுகின்ற நிதி முதலீடுகள் உரிமைத்துவம் மற்றும் கடன் பிணைகளில் உள்ளடக்கப்படுகின்றது. வியாபாரம் செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படாத அல்லது இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதி நிச்சயிக்கப்படாத உரிமை மூலதன முதலீடுகள் விற்பனைக்காக காணப்படுகின்ற நிதி முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையிலுள்ள முடிவுறா காலப்பகுதி கொண்டவையான கடன் பிணைகள், திரவத்தன்மை தேவைகளுக்காகவும் அல்லது சந்தை நிலைமை மாற்றங்களின் காரணமாகவும் விற்கப்படக் கூடியவையாகும். ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர், விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகள், ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் திரண்ட இலாபம் அல்லது நட்டம் அங்கீகரிக்கப்பட்ட வேளையில், அல்லது வருமானக் கூற்றிலுள்ள நிதிக் கிரயத்தில் மீள வகைப்படுத்தப்பட்ட திரண்ட நட்டங்கள் முதிர்ச்சியடையும் எனக் கருதப்பட்ட மற்றும் விற்பனைக்காக உள்ள ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட்ட வேளையில் மீள அங்கீகரிக்கப்படும் வரை விற்பனை ஒதுக்கத்தில் காணப்படுகின்ற ஏனைய முற்றுமடங்கிய வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட தேறாத இலாபம் அல்லது நட்டத்துடன் சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள கடன் பிணைகள் மீதான வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வீத முறையில் மதிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

தொகுதியானது அதனது விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களை பொருத்தமான விதத்தில் எதிர்வரும் குறுகிய காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட முடியுமான அவற்றின் இயலுமையின் அடிப்படையில் மதிப்பிடுகின்றது. இந்த நிதிச் சொத்துக்களை செயற்பாடற்ற சந்தை காரணமாக தொகுதிக்கு விற்பனை செய்ய முடியாமல் போனால் மற்றும் எதிர்காலத்தில் அவ்வாறான குறிப்பிடத்தக்க மாற்றங்களை செய்யவேண்டுமென முகாமைத்துவம் கருதினால் அவ்வாறான அருமையான சந்தர்ப்பங்களில் தொகுதி இந்த நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்தும்.

நிதிச் சொத்துக்கள் அதன் பொருள்கோடலிற்கு உட்படும் வேளையிலும் முதிர்ச்சி வரை அல்லது எதிர்காலத்திற்காக இச்சொத்துக்களை வைத்திருக்கக் கூடிய விருப்பமும் ஆற்றலும் தொகுதிக்கு இருப்பினும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளாக மீள வகைப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. அதற்கமைய நிறுவனத்திற்கு நிதிச் சொத்துக்களை வைத்திருக்கக் கூடிய ஆற்றலும் விருப்பமும் காணப்படின் முதிர்ச்சி வரை வைத்திருக்கக்கூடிய வகைப்படுத்தலுக்கு அனுமதிக்கப்படுகின்றது.

முதலீடுகளின் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது இலாபம் அல்லது நட்டத்திற்கு உரிமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு முன்னைய இலாபம் அல்லது நட்டம் EIR இனைப் பயன்படுத்தி அதில் விற்பனைக்காக வைத்திருக்கப்பட வேண்டியவையாக மீளவகைப்படுத்தப்படுகின்றது. புதிய முதிர்ச்சிக் கிரயத்திற்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சலிற்கும் இடையிலான எந்தவொரு வேறுபாடும் EIR இனைப் பயன்படுத்தி எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது மதிப்பிடப்படுகின்றது. அதன் பின்னர் சொத்துக்கள் தேறாதவை என தீர்மானிக்கப்படின் உரிமை மூலதனத்தில் பதியப்பட்டுள்ள தொகை வருமானக் கூற்றிற்கு மீள வகைப்படுத்தப்படுகின்றது.

### அங்கீகரிக்காதிருத்தல்

நிதிச் சொத்தொன்று (அல்லது, நிதிச்சொத்தென்றின் பகுதியாக அல்லது ஒத்த நிதிச்சொத்துக்களின் தொகுதியொன்றின் பகுதியாக) அங்கீகரிக்கப்படுவது,

i) சொத்து காலாவதியானதிலிருந்து காசுப் பாய்ச்சலைப் பெறுவதற்கான உரித்து காணப்படுகையில்

ii) சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலைப் பெறுவதற்கான உரித்தினை தொகுதி மாற்றீடு செய்கையில் அல்லது பொருண்மையான தாமதமின்றி "pass-through" ஏற்பாட்டின் கீழ் கிடைத்த காசுப்பாய்ச்சலினை மூன்றாம் தரப்பினருக்கு முழுமையாக செலுத்துவதற்கான கடப்பாடொன்று காணப்படுவதாக கருதுகையில், இல்லாவிடின்,

- தொகுதியினால் சொத்துக்களின் சகல இடர்களும் வெகுமதிகளும் முழுமையாக மாற்றீடு செய்யப்படுகையில் அல்லது

- சொத்துக்களின் சகல இடர்களும் வெகுமதிகளும் தொகுதி முழுமையாக மாற்றீடு செய்யாதவிடத்து நிறுத்தி வைக்கப்பட்ட அவ்வாறான சொத்துக்களின் கட்டுப்பாட்டினை மாற்றீடு செய்கையில்

சொத்தொன்றிலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைப்பதற்காக தொகுதி அதனை மாற்றீடு செய்கையில் அல்லது "pass-through" ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கையில் அல்லது சொத்துக்களின் சகல இடர்களும் வெகுமதிகளும் முழுமையாக மாற்றீடு செய்யாதவிடத்து அல்லது நிறுத்தி வைக்கப்படாதவிடத்து அல்லது அவ்வாறான சொத்துக்களின் கட்டுப்பாட்டினை மாற்றீடு செய்யாதவிடத்து கம்பனியின் தொடர்ச்சியான தலையீட்டை ஓரளவிற்கு பேணிவருவதற்காக சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

அச்சந்தர்ப்பத்தில், தொகுதியுடன் சம்பந்தப்பட்ட பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்படுகின்றன. மாற்றீடு செய்யப்பட்ட சொத்துக்களும் சம்பந்தப்பட்ட பொறுப்பும், தொகுதி நிறுத்தி வைத்து உரித்தினையும் பொறுப்பினையும் வெளிக்காட்டும் விதத்தில் மாற்றீடு செய்யப்பட்ட சொத்துக்களும் சம்பந்தப்பட்ட பொறுப்பும் அளவிடப்படுகின்றன.

மாற்றீடு செய்யப்பட்ட சொத்தின் மீது சான்றளிக்கப்படும் விதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்ச்சியான தலையீடு சொத்துக்களின் ஆரம்ப முன்கொண்டு சென்ற தொகைக்கு குறைந்த பெறுமதியில் அத்துடன் தொகுதிக்கு மீளளிக்கப்படுவதற்கு தேவையானதாக கருத்திற்கொள்ளப்பட்டு உச்ச தொகைக்கு அளவிடப்படுகின்றது.

### ii) நிதிச் சொத்துக்களின் காலக்கழிவு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதியினால் நிதிச்சொத்தொன்று அல்லது நிதிச் சொத்தொன்றின் தொகுதி காலக்கழிவு செய்யப்பட வேண்டுமா என்பது பொருத்தமான சான்றுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. நிதிச்சொத்தொன்று அல்லது நிதிச் சொத்தொன்றின் தொகுதி காலக்கழிவிற்காக கருத்திற்கொள்ளப்படுவது, சொத்துக்களை ஆரம்பத்தில் அங்கீகரித்ததன் பின்னர் இடம்பெறுகின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் பெறுபேறுகளினால் காலக்கழிவு செய்யப்பட வேண்டும் என்பதற்கான சான்றுகள் காணப்படுமாயின் மாத்திரம் அல்லது நம்பகரமாக மதிப்பிடத்தக்க நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்தொன்றின் தொகுதியின் எதிர்கால மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சலின் அடிப்படையிலான செல்வாக்கு அந்த காலக்கழிவு நிகழ்வில் காணப்படின் மாத்திரமாகும்.

வட்டி அல்லது கடன் தவணையினை செலுத்தத் தவறியிருத்தல் அல்லது கடப்பாட்டினை ஏய்ப்புச் செய்தல் இடம்பெற்றிருத்தல், அவர்கள் முறிவடைந்திருப்பதற்கான சாத்தியம் அல்லது ஏனைய நிதி இயலாமைகள் அத்துடன் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலை கணிப்பிடுவதற்கான குறைபாடு காணப்படுதலை அவதானிப்பதற்கான தரவுகள் காணப்படுகையில் கடன்பட்டோர் அல்லது கடன்பட்டோரின் தொகுதி கருத்திற்கொள்ளத்தக்க நிதிச் சிக்கல்களுக்கு உட்பட்டிருக்கும், அதாவது குறைபாடுகள் அல்லது ஏய்ப்புச் செய்தல் மற்றும் - தொடர்புபட்ட பொருளாதார விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுகையில் அதற்கான சமிக்கைகள் காலக்கழிவு மீதான சான்றுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

### காலக்கழிவுக் கிரயத்தில் முன்கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள்

காலக்கழிவுக் கிரயத்தில் முன்கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்களிற்காக, தனித்தனியாக முக்கியத்துவம் பெறுகின்ற நிதிச் சொத்துக்களிற்காக அல்லது காலக்கழிவிற்கான பொருத்தமான சான்றுகள் வெவ்வேறாக காணப்படுகின்றதா என்பது ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. தனித்தனியாக மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களிற்காக காலக்கழிவு செய்வதற்கான பொருத்தமான சான்றுகள் வெவ்வேறாக காணப்படவில்லையென தொகுதி தீர்மானிக்குமாயின் அது பொருண்மையாக காணப்படாதவிடத்தும் அதற்கொத்த கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் தொகுதி அதற்கு உள்ளடக்கப்படுவதுடன் காலக்கழிவிற்காக தொகுதி மதிப்பிடப்படுகின்றது. காலக்கழிவிற்காக தனித்தனியாக மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் காலக்கழிவு நட்டத்திற்கான அல்லது பேணிவரப்பட வேண்டியதாக அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் காலக்கழிவின் ஒட்டுமொத்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

காலக்கழிவு நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதற்கான பொருண்மையான சான்று காணப்படுமாயின் நட்டத்தின் அளவு, சொத்தின் முன்கொண்டு செல்லப்பட்ட தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் (இதுவரை செய்யப்படாத எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நட்டம் நீங்கலாக) தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டில் அளவிடப்படுகின்றது. எதிர்கால மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதி நிதிச் சொத்தின் ஆரம்ப பயனுள்ள வட்டி வீதத்தில் கழிவீடு செய்யப்படுகின்றது. கடன் தொகையொன்றில் கூட்டுவட்டி வீதம் காணப்படுமாயின் எந்தவொரு காலக்கழிவு நட்டத்தினையும் அளவிடுவதற்காக தற்போதுள்ள பயனுள்ள வட்டி வீதமே அளவீட்டிற்கான கழிவு வீதமாக எடுக்கப்படுகின்றது.

அனுமதிக்கப்பட்ட கணக்கொன்றினை பயன்படுத்துவதன் மூலம் சொத்து தொடர்பான முன்கொண்டு செல்லப்பட்ட தொகை கழிக்கப்படுவதுடன் நட்டத்தின் அளவு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வட்டி வருமானம் அட்டுறுவாவதற்காக முன்கொண்டு செல்லும் தொகையினைக் கழித்து பேணி வரப்படுவதுடன் காலக்கழிவு நட்டத்தினை அளவிடும் பணிக்காக எதிர்கால காசுப் பாய்ச்சலை கழிவீடு செய்வதற்காக பயன்படுத்திய கழிவு வீதத்தினைப் பிரயோகித்து அட்டுவாக்கப்படுகின்றது. வட்டி வருமானம் நிதிக்கூற்றில் நிதி வருமானத்தின் பகுதியொன்றாக அறிக்கையிடப்படுகின்றது. எதிர்கால அறவிடுதல்கள் தொடர்பில் யதார்த்தமான எதிர்பார்ப்புகள் காணப்படாதவிடத்தும் சகல பிணைகளும் காலாவதியாகியும் இருப்பின் தொகுதிக்கு மாற்றீடு செய்கையில் குறித்துரைத்த அவகாசத்துடன் கடன் பதிவழிப்புச் செய்யப்படுகின்றது. பிந்திய வருடமொன்றாயின் காலக்கழிவு இனங்காணப்பட்ட பின்னர் இடம்பெற்ற நிகழ்வு காரணமாக மதிப்பிடப்பட்ட காலக்கழிவின் அளவு அதிகரித்தல் அல்லது குறைதல் போன்றவற்றுக்கிடையே முன்னர் இனங்காணப்பட்ட காலக்கழிவு நட்டம் அனுமதிக்கப்பட்ட கணக்கினை சீராக்குவதன் மூலம் அதிகரித்தல் அல்லது குறைத்தல் செய்யப்படுகின்றது. எதிர்கால பதிவழித்தலொன்று பின்னர் பெற்றுக்கொள்ளப்படுமாயின், அறவிடப்படுதல் வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது.

### விற்பனைக்காக காணப்படும் நிதிசார் முதலீடுகள்

முதலீடொன்று அல்லது முதலீட்டுத் தொகுதியொன்று காலாவதியானமைக்கு உரிய சான்றுகள் காணப்படுமாயின் விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகளிற்காக தொகுதி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அதனை மதிப்பிடுகின்றது.

விற்பனைக்குள்ளவையாக வகைப்படுத்தப்பட்ட உரிமைத்துவ முதலீடுகள் அவற்றின் கிரயத்திற்கு குறைந்த முதலீடுகளின் முன்கொண்டு செல்லப்பட்ட தொகைக்கு கருத்திற்கொள்ளப்பட்டு தொடர்ந்தும் பேணப்படுகின்ற குறைவிற்கான சான்றுகள் உள்ளடக்கப்படுகின்றன. நட்டமேற்படுவதற்கான சான்றுகள் காணப்படுமாயின் வருமானக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டின் மீது ஏதேனும் காலக்கழிவு நட்டத்தினைக் கழித்து கையேற்கப்பட்ட கிரயத்திற்கும் நிகழ்கால முன்கொண்டு செல்லப்படும் தொகைக்குமிடையே வேறுபாடாக அளவிடப்படுகின்ற திரண்ட நட்டம் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றிலிருந்து அகற்றப்பட்டு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. உரிமைத்துவ முதலீட்டின் மீதான காலக்கழிவு நட்டம் வருமானக் கூற்றின் மூலம் அங்கீகரிக்கப்படுவதில்லை. காலக்கழிவின் பின்னர் அவற்றின் முன்கொண்டு சென்ற தொகையின் அதிகரிப்பு ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றில் நேரடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

விற்பனைக்கு உள்ளதாக வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகளில் காலக்கழிவுக் கிரயத்திற்கு முன்கொண்டு செல்லப்பட்ட நிதிச்சொத்துக்கள் என்ற ஒத்த நியதியின் அடிப்படையில் காலக்கழிவு மதிப்பிடப்படுகின்றது. இருப்பினும், வருமானக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டின் மீது ஏதேனும் நட்டச்சேதத்தினைக் கழித்து காலக்கழிவுக் கிரயத்திற்கும் நடப்பு முன்கொண்டு செல்லப்படுகின்ற தொகைக்குமிடையே அளவிடப்பட்ட வேறுபாடு காலக்கழிவிற்காக அறிக்கையிடப்படுகின்ற திரண்ட நட்டமாகும். காலக்கழிவு நட்டத்தினை அளவிடும் கருமத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சலை கழிவீடு செய்வதற்காக பயன்படுத்திய வட்டி வீதத்தினை பிரயோகித்து சொத்தின் குறைக்கப்பட்ட முன்கொண்டு செல்லப்படுகின்ற தொகையின் அடிப்படையில் எதிர்கால வட்டி வருமானத்தினை அட்டுறுவாக்கவதற்காக தொடர்ச்சியாக பேணிவரப்படுகின்றது. வட்டி வருமானம் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாக அறிக்கையிடப்படுகின்றது. பிந்திய வருடங்களில் கடன் கருவியொன்றின் முன்கொண்டு செல்லப்படுகின்ற தொகை அதிகரிக்குமாயின் அத்துடன் அதிகரிப்பு வருமானக் கூற்றில் காலக்கழிவு நட்டமாக அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெறுகின்ற நிகழ்விற்கு சான்றுகளுடன் தொடர்புபடுத்த முடியுமாயின் காலக்கழிவு நட்டம் வருமானக் கூற்றின் ஊடாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### iii) நிதிப் பொறுப்புக்கள்

#### ஆரம்பத்தில் இனங்காணலும் அளவிடுதலும்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 39 இன் பிரகாரம் நிதிப் பொறுப்புக்களினுள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள், ஏனைய மூலதனப் பொறுப்புக்களின் மூலம் அல்லது பயனுள்ள ஒப்படைப்பின் போது ஒப்படைத்தல் உபகரணமாக அறிமுகப்படுத்தப்படுகின்ற கருவியாக உரிய பிரகாரம் நியாயமான பெறுமதியில் நிதிசார் பொறுப்பாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. தொகுதியினால் அந்த நிதிப் பொறுப்புக்கள் தொடர்பிலான பகுப்பாய்வு ஆரம்ப அங்கீகரித்தலில் தீர்மானிக்கப்படுகின்றது.

சகல நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியிலும் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்களின் போதும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் காலக்கழிவுக் கிரயத்திலும் முன்கொண்டு செல்லப்படுகின்றது. இது நேரடியாக கொடுக்கல்வாங்கல் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

தொகுதியின் நிதிப் பொறுப்புக்களின் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மீதிகள், வங்கி மேலதிகப்பற்று, கடன்களும் கடன் பெறுகைகளும் ஏனைய நிதிப்பொறுப்புக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

#### பிந்திய அளவிடுதல்

நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அளவிடுதல்கள் பின்வருமாறு அவற்றின் பகுப்பாய்வின் மீது தங்கியுள்ளது.

#### கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள்

ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், வட்டியுடன் கூடிய கடன்களும் கடன் பெறுதல்களும் பயனுள்ள வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்திற்கு பின்னர் அளவிடப்படுகின்றது. பொறுப்புக்கள் இனங்காணப்படாத வேளையில் இலாபமும் நட்டமும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் பயனுள்ள வட்டி வீதத்தின் (EIR) அடிப்படையில் காலக்கழிவு நடைமுறை அங்கீகரிக்கப்படுகின்றது.

கையேற்புச் செய்கையில் ஓரளவேனும் அல்லது தவணைப்பணம் மற்றும் பயனுள்ள வட்டி வீதத்தின் (EIR) பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தினை கணக்கீடு செய்வதன் மூலம் காலக்கழிவுக் கிரயம் கணிக்கப்படுகின்றது. பயனுள்ள வட்டி வீதத்தின் (EIR) காலக்கழிவு வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

#### அங்கீகரிக்கப்படாமை

பொறுப்பின் கீழ் கடப்பாடு விடுவிக்கப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்படுகின்ற அல்லது காலாவதியாகின்ற சந்தர்ப்பங்களில் நிதிப் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

காணப்படுகின்ற நிதிப் பொறுப்புக்கள் கடன் வழங்குபவருக்குப் பதிலாக வேறொருவர் குறிப்பிடத்தக்க வேறு விடயங்கள் காரணமாக அல்லது காணப்படும் பொறுப்புக்களின் நிபந்தனைகளை குறிப்பிடத்தக்களவில் புதுப்பித்தல் மீது பதிலீடு செய்கையில், அவ்வாறான பரிமாற்றம் அல்லது புதுப்பித்தல் ஆரம்பப் பொறுப்பு அங்கீகரிக்கப்படாமையாக கருத்திற்கொள்ளப்படும். புதிய பொறுப்புக்களை அங்கீகரித்தல் மற்றும் குறித்த முன்கொண்டு சென்ற தொகையின் வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### iv) நிதிக் கருவிகளை எதிரீடு செய்தல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் இனங்காணப்பட்ட அளவினை எதிரீடு செய்வதற்காக நடைமுறையில் சட்டரீதியான உரிமை அமுலில் இருப்பினும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்காக எதிர்பார்ப்பு இருப்பினும் அல்லது சொத்துக்களை தேறச்செய்வதற்காக பொறுப்புக்களை சமமாக தீர்ப்பனவு செய்யமுடியுமாயினும் மாத்திரமே தேறிய தொகை நிதி நிலைமைக்கூற்றில் அறிக்கையிடப்படும்.

### v) நிதிக் கருவிகள் தொடர்பான நியாயப் பெறுமதி

செயற்பாடுடைய சந்தைகளில் வியாபரம் செய்யப்படுகின்ற நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி, ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் வெளியிடப்பட்ட சந்தை விலைக்காக அல்லது கொடுக்கல்வாங்கல் செய்வோரின் விலைகளின் வெளிப்படுத்தல்களிற்கு தொடர்புபடுத்துவதன் மூலம் (நீண்டகால நிலைமைக்காக கூறுவிலை மற்றும் குறுங்கால நிலைமைக்காக கோரப்பட்ட விலை) கொடுக்கல்வாங்கல் கிரயத்திற்காக எவ்விதக் குறைத்தல்களுமின்றி தீர்மானிக்கப்படுகின்றது.

செயற்பாடுடைய சந்தைகளில் வியாபரம் செய்யப்படாத நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி, குறித்த மதிப்பீட்டு நுட்ப முறையினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. மிகவும் கிட்டிய சந்தைக் கொடுக்கல்வாங்கலைப் பயன்படுத்தி அந்த நுட்ப முறைகளில் குறிப்பிடத்தக்களவில் அவ்வாறான ஏனைய கருவியொன்றின் நடப்பு நியாயப் பெறுமதிக்கு தொடர்புபடுத்தி கழிவுசெய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு அல்லது ஏனைய மதிப்பீட்டு பதிலீடுகள் உள்ளடக்கப்பட முடியும்.

### 2.2.10 நிதிசாராத சொத்துக்களின் காலக்கழிவு

தொகுதியினால் ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும், சொத்தொன்றினைக் காலக்கழிவு செய்வதற்கான தேவையுள்ளதா என்பது மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஏதேனும் தேவை காணப்படுமிடத்து அல்லது சொத்தொன்றிற்காக வருடாந்தம் காலக்கழிவு பரிசோதனை தேவைப்படின் தொகுதியினால் சொத்திலிருந்து அறவிடப்படத்தக்க பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகின்றது.

சொத்தில் அல்லது நிதியினை ஈட்டும் அலகொன்றில் (CGU) விற்பனைக்கான கிரயத்தினைக் கழித்து வரும் நியாயப் பெறுமதி சொத்திலிருந்து அறவிடத்தக்க தொகையாவதுடன் ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துத் தொகுதியொன்றிலிருந்து பெருமளவில் சுதந்திரமாக நிதி ஈட்டல்கள் எழாதிருக்கும் சொத்தொன்றாயின் தனியொரு சொத்தாக தீர்மானிக்கப்படுகின்றது. சொத்தொன்றின் முன்கொண்டு சென்ற தொகை அல்லது நிதியீட்டல் அலகின் அறவிடப்படத்தக்க பெறுமதியை விஞ்சும் பொழுது சொத்து காலக்கழிவு செய்யப்பட வேண்டும் எனக் கருதப்படுவதுடன் அதன்போது அறவிடத்தக்க பெறுமதிக்கு எதிராக பதிவழிக்கப்படுகின்றது. மதிப்பீட்டுப் பெறுமதி பயன்படுத்தலில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் நிகழ்கால சந்தை மதிப்பீட்டுத் தொகையின் தற்போதைய பெறுமதியும் சொத்திற்காக விசேட இடர் வெளிப்படுத்தப்படுகின்ற முந்திய-வரிக் கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதியும் கழிவீடு செய்யப்படுகின்றது. விற்பனைக்காக கிரயத்தினைக் கழித்து நியாயப் பெறுமதியினை தீர்மானிக்கையில் மிகக் கிட்டிய சந்தைக் கொடுக்கல்வாங்கல் காணப்படுமாயின் அது கருத்திற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறான கொடுக்கல்வாங்கலைக் கண்டுகொள்ள முடியாதிருப்பின் குறித்த மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்படும். பல்வேறு மதிப்பிடல்களும் பொது வியாபார நிர்வாகத்திற்காக வெளியிடப்பட்ட பங்கு விலை அல்லது ஏனைய பெற்றுக்கொள்ளக்கூடிய நியாயப் பெறுமதி சுட்டியின் மூலம் இக் கணிப்பீடு உறுதிப்படுத்தப்படுகின்றது. பதிவேட்டுப் பொருட்கள் மீது காலக்கழிவு உள்ளடக்கப்பட்ட தொடர் செயற்பாட்டின் காலக்கழிவு நட்டம், அதற்கு முன்னர் மீள விலைமதிக்கப்பட்ட ஆதனங்களிற்கானவை நீங்கலாக, ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தினை மதிப்பிடுகையில் காலக்கழிவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் கருமத்திற்கேற்ப அச்செலவின வகைகளின் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. அதன்போது முந்திய ஏதேனும் தொகைகள் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் காட்டப்பட்டு காலக்கழிவு அங்கீகரிக்கப்படுகின்றது.

நன்மதிப்பு தவிர்ந்த ஏனைய சொத்துக்களிற்காக முன்னர் அங்கீகரிக்கப்பட்ட காலக்கழிவு நட்டம் தொடர்ந்தும் காணப்படமாட்டாதா அல்லது குறையுமா என்பது தொடர்பில் ஏதேனும் சுட்டிக்காட்டல்கள் உள்ளனவா என்பதற்காக ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் மதிப்பீடொன்று செய்யப்படுகின்றது. அவ்வாறான சுட்டிக்காட்டல் காணப்படுகையில் தொகுதியினால் சொத்திலிருந்து அல்லது நிதியீட்டல் அலகிலிருந்து அறவிடப்படத்தக்க தொகை மதிப்பீடு செய்யப்படுகின்றது.

முந்திய காலக்கழிவு நட்டம் அங்கீகரிக்கப்பட்டமை முதல் சொத்தில் அறவிடப்படத்தக்க தொகையினை தீர்மானிக்கும் வரையிலும் பயன்படுத்தப்பட்ட கருதுகோள்களில் வேறுபாடுகள் இருப்பின் மாத்திரம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட காலக்கழிவு நட்டம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி அறவிடப்படத்தக்க தொகையினை விஞ்சாதிருக்கையில் அல்லது தீர்மானிக்கப்பட வேண்டிய முன்கொண்டு சென்ற தொகையினை விஞ்சாதிருக்கையில் பெறுமானத்தேய்வைக் கழித்ததன் பின்னர் முன்னைய ஆண்டின் சொத்துக்களிற்காக காலக்கழிவு நட்டம் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதனால் மீளாய்வு வரையறுக்கப்படுகின்றது. மீள்மதிப்பீடு அதிகரித்துள்ளதாக கருதப்பட்ட மீளாய்வின்போது சொத்து மீள் விலைமதிக்கப்பட்ட தொகைக்கு முன்கொண்டு செல்லப்படுவதில்லையாயின் அவ்வாறான மீளாய்வு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.2.11 காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு மற்றும் மூன்று மாதங்களிற்கு அல்லது அதற்கு குறைவான பயன்பாட்டுக் காலத்தினைக் கொண்ட குறுங்கால வைப்புக்களை உள்ளடக்கியுள்ளவை காசு மற்றும் குறுங்கால வைப்புக்களாகும். தொகுதியின் காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக காசும் காசுக்கு சமமான விடயங்கள் மேற்படி வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு நிலுவையான வங்கி மேலதிகப்பற்றினைக் கழித்ததன் பின்னர் காசு மற்றும் குறுங்கால வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

### 2.2.12 ஏற்பாடுகள்

முன்னைய நிகழ்வொன்றின் விளைவாக தொகுதிக்கு நிகழ்காலப் பொறுப்பொன்று (சட்டரீதியான அல்லது உருவாக்கப்பட்ட) காணப்படுகையில் ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகின்றது. பொறுப்பினை தீர்ப்பதற்கான பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்கள் வெளிப்பாய்ச்சப்பட முடியுமாவதுடன் பொறுப்பின் அளவிற்கு நம்பகமான மதிப்பீடொன்று செய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் சிலவற்றை அல்லது அனைத்தையும் மீளளிப்பிற்காக தொகுதி எதிர்பார்க்குமாயின் உதாரணமாக காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் மீளளித்தல் தனிப்பட்ட சொத்தொன்றாக அங்கீகரிக்கப்படுவது மீளளித்தல் உள்ளபடி உறுதிப்படுத்த முடியுமாயின் மாத்திரமேயாகும். எந்தவொரு ஏற்பாட்டுடனும் தொடர்புடைய செலவினம் ஏதேனும் மீளளித்தல் கழிக்கப்பட்டு வருமானக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

பணத்தின் நடப்புப் பெறுமதி தொடர்பிலான தாக்கம் பொருண்மையானதாக காணப்படின், பொறுப்பின் விசேட ஆபத்தினை வெளிக்காட்டும் வகையில் மீளாய்வாண்டு வரி முன்னைய விகிதாசாரத்தினை பயன்படுத்தி உரிய பிரகாரம் ஏற்பாட்டிலிருந்து கழிவு செய்யப்படுகின்றது. கழிவு செய்வதற்காக பயன்படுத்துகையில், காலம் கடந்துசெல்லல் காரணமாக ஏற்பாட்டிற்கான அதிகரிப்பு நிதிக் கிரயமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

## 2.2.13 ஓய்வூதிய நலப் பொறுப்பு

### (a) குறித்துரைத்த பங்களித்தல் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி

தொடர்புடைய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு இணங்கும் வகையில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களித்தல் பொருத்தமானதாகும். கம்பனியினால் ஊழியர்கள் மொத்தச் சம்பளத்தில் 15 சதவீதமும் 3 சதவீதமும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

### (b) குறித்துரைத்த நலத் திட்டம் - பணிக்கொடை

கம்பனியினால் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் அடிப்படையில் அறிவுரைகளுடன் கருதுகோள் நலனளித்தல் மதிப்பீட்டு முறையினை உபயோகித்து குறித்துரைத்த நலத் திட்டமாகிய பணிக்கொடை தொடர்பான உடன்படிக்கையிடப்பட்ட ஓய்வூதிய நலனின் தற்போதைய பெறுமதி அளவிடப்படுகின்றது. குறித்துரைத்த நலத் திட்டத்திற்கான ஆயுட்கால கணிப்பீட்டிலிருந்து எழும் இலாப நட்டங்கள் அவை எழுந்த நிதியாண்டினுள் வருமானம் அல்லது செலவினமாக ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

இருப்பினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையினை பூரணப்படுத்திய பின்னர் மாத்திரம் இந்த பொறுப்பு எழுகின்றது.

பணிக்கொடை ஏற்பாட்டிற்காக வெளிவாரி நிதியீட்டம் செய்யப்படுவதில்லை.

## 2.3 முக்கிய கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

தொகுதியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வருமானம் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பில் வெளிப்படுத்தல் தொடர்பாக அறிக்கையிடல் காலத்தின் முடிவில் முகாமைத்துவத்தினால் அறிக்கையிடலில் பொருண்மையான தாக்கமுடைய தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், இந்த மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மைகள், எதிர்வரும் காலங்களில் தாக்கம் செலுத்தும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லும் தொகைக்காக தேவைப்படுகின்ற பொருண்மையான சீராக்கங்களின் விளைவுகளின் காரணத்தினால் ஏற்பட்டதாகும்.

**தீர்ப்புகள்**

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கையினை தொடர்புபடுத்தும் செயற்பாட்டில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது அதிகளவு தாக்கம் செலுத்தக்கூடிய முக்கியமான பின்வரும் தீர்ப்புகள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

**பிற்போட்ட வரிச் சொத்துக்கள்**

பயன்படுத்தப்படாத சகல வரி நட்டங்களிற்குமாக பிற்போட்ட வரிச் சொத்துக்கள் ஒரளவிற்கு அங்கீகரிக்கப்படுவதுடன் நட்டங்களிற்கு எதிராக பயன்படுத்தக் கூடியதாகவுள்ள வரிக்குப் பின்னரான இலாபத்தினை எதிர்பார்க்க முடியும். எதிர்கால வரித் திட்டங்கள் உபாய வழிகளுடன் ஏற்படக் கூடிய காலம் மற்றும் எதிர்கால வரி சாட்டப்படத்தக்க இலாபத்தின் அளவினை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிப்படக்கூடியதான பிற்போட்ட வரிச் சொத்தினை தீர்மானிப்பதற்காக முக்கியமான முகாமைத்துவ தீர்ப்பு தேவைப்படுகின்றது.

**மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்**

அடுத்துவரும் நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்காக பொருண்மையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு காரணமாகின்ற குறிப்பிடத்தக்க ஆபத்து காணப்படுகின்ற எதிர்காலம் தொடர்பான முக்கிய எடுகோள்கள் மற்றும் அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான நிச்சயமற்ற மதிப்பீடுகள் தொடர்பான ஏனைய முக்கியமான மூலங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. தொகுதியினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ள தகவல்கள் அந்த மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயிருப்பினும், எதிர்கால அபிவிருத்தி தொடர்பில் காணப்படுகின்ற நிலமைகள் மற்றும் சந்தை மாற்றங்கள் அல்லது தொகுதியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு எழுகின்ற நிலமைகள் காரணமாக எடுகோள்கள் மாற்றமடைகின்றன. அவ்வாறான மாற்றங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் எடுகோள்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

**குறித்துரைத்த நலத் திட்டம்**

குறித்துரைத்த நலத் திட்டத்தின் பணிக்கொடை தொடர்பான கிரயம், மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. கழிவீட்டு வீதம், எதிர்கால சம்பள ஏற்றம் மற்றும் ஓய்வு பெறுகின்ற வயது போன்ற எடுகோள்கள் ஆயுட்கால மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுகின்றன. இத்திட்டங்களின் நீண்டகால தன்மை காரணமாக அந்த மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. சகல எடுகோள்களும் ஒவ்வொரு அறிக்கைத் திகதியன்றும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

## 2.4 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள்

**இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 - ஊழியர் நலன்கள் (2013 திருத்திய)**

தொகுதியினால் திருத்தப்பட்ட நியமங்களில் காண்பிக்கப்பட்டுள்ள தற்காலிக ஏற்பாடுகளுடன் இணங்கியவாறு மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 (திருத்திய 19) பின்பற்றப்படுகின்றது. தொகுதிக்கு தாக்கம் செலுத்தும் பிரதான மாற்றங்களிற்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

ஆயுட்காலக் கணிப்பீட்டின் சாதகங்கள் மற்றும் நட்டங்களை தொகுதி அவை இடம்பெற்ற காலப்பகுதியில் வருமானக் கூற்றில் முன்கூட்டியே அங்கீகரிக்கின்றது. இந்த முறை திருத்திய இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 இன் கீழ் தொடர்ந்தும் அனுமதிக்கப்படாதிருப்பதுடன் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்ற ஆயுட்காலக் கணிப்பீட்டின் சாதகங்கள் மற்றும் நட்டங்களை அவை இடம்பெற்ற காலப்பகுதியில் அங்கீகரிப்பதற்காக தொகுதியினால் அக்கணக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டது.

தாக்கம் பொருண்மையாகக் காணப்படாமையால் இப்பின்பற்றுகையின் விளைவு கணக்கீடு செய்யப்படவில்லை.

## 2.5 வெளியிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை நடைமுறைக்கு வராதுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தாக்கங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) இலங்கை பட்டயக்கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டவையாக இருப்பதுடன் அவை எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரும் திகதியொன்று காணப்படுவதனால் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அவை கருத்திற்கொள்ளப்படவில்லை. தொகுதியினால் நிகழ்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில் அந்த இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் தாக்கமளிக்கும் என்பதனால் எதிர்கால நிதிக்கூற்றுக்களிலும் தாக்கங்களை செலுத்தலாம்.

**a) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 - நிதிக் கருவிகள் : வகைப்படுத்தலும் அளவிடுதலும்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இற்குப் பதிலாக வெளியிடப்பட்ட இந்த நியமத்தின் முதலாம் கட்டம் வெளிப்படுத்தும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வகைப்படுத்தி அளவிடுதலுடன் தொடர்புடையதாகும். தொகுதியினால் காலக்கிரமத்தில் தாக்கத்தின் அளவு கணிப்பிடப்படும்.

இந்த நியமம் 2015 சனவரி 01 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்காக ஆரம்பத்தில் தாக்கம் செலுத்தக்கூடியதாகும். இருப்பினும், பின்னர் அமுலுக்குவரும் திகதி பிற்போடப்பட்டது.

**b) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 - நியாயப் பெறுமதியை அளவிடுதல்**

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் கீழ் சகல நியாயப் பெறுமதி அளவிடுதல்களிற்காகவும் வழிகாட்டுதல் தொடர்பான தனிப்பட்ட மூலமொன்று இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இனை வடிவமைத்து இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் கீழ் சகல நியாயப் பெறுமதி அளவிடுதல்களிற்குமான வழிகாட்டலை வழங்குகின்றது.

இந்த நியமம் 2015 சனவரி 01 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்காக தாக்கம் செலுத்தக்கூடியதாகும். இருப்பினும், இந்த நியமத்தில் உள்ளடங்கியுள்ள நியாயப் பெறுமதி அளவிடுதல் தத்துவங்களை பிரயோகித்தல் தற்போது பரிந்துரைக்கப்படுகின்றது.

மேற்படி விடயங்களிற்கு மேலதிகமாக, 2014 சனவரி 01 முதல் அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்காக பின்வரும் நியமங்களும் தாக்கம் செலுத்துவனவாகும்.

**SLFRS 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**
**SLFRS 11 - கூட்டிணைந்த திட்டம்**
**SLFRS 12 - ஏனைய நிறுவனங்களிலுள்ள கடப்பாடுகள் தொடர்பில் வெளிப்படுத்தல்**

தற்போது SLFRS 27 – ஒன்றித்த மற்றும் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்கள், SLFRS 28 – துணைக்கம்பனிகளில் முதலீடு போன்ற நியமங்களிலுள்ள அங்கீகரித்தல்கள், அளவிடுதல் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பவற்றின் மீது மேற்படி 3 நியமங்களும் தாக்கம் செலுத்துகின்றன. SLFRS31 – கூட்டுமுயற்சிகளின் கடப்பாடு மற்றும் SLC 12 மற்றும் SLC 13 என்பன முறையே விசேட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் (SPES) மற்றும் ஒருங்கிணைந்து நிர்வகிக்கப்பட்டு வருகின்ற நிறுவனங்களில் ஒன்றிணைத்தலின் மீது தாக்கம் செலுத்தும் நியமங்களாகும்.

விசேட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் (SPES) அடங்கலாக அனைத்து நிறுவனங்களிற்காகவும் செல்லுபடியாகின்ற தனிப்பட்ட கட்டுப்பாட்டு நிறுவனமொன்றை தாபித்தல் மற்றும் பங்குடமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் விகிதாசார அடிப்படை ஒன்றிணைப்பினை நீக்குதல் என்பன முறையே SLFRS10 – மற்றும் SLFRS11 இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய வேறுபாடுகளாகும்.

ஏனைய வணிகங்களிலுள்ள கடப்பாடுகளுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் அடிப்படையிலமைந்த நியமமொன்று SLFRS12 இன் கீழ் தாபிக்கப்படவுள்ளது. SLFRS27, SLFRS28 மற்றும் SLFRS31 ஆகிய முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட நியமங்களைப் போன்றே இவற்றிலும் புதிய வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கியுள்ளன.
இந்த நியமங்கள் அவை அமுலுக்கு வந்ததும் தொகுதியினால் பின்பற்றப்படும், விபரமான மீளாய்வு முடியும் வரை, இந்த நிதிக்கூற்றுக்களை பிரசுரிக்கும் திகதியிலுள்ளவாறு நிதிசார் தாக்கங்களை நியாயமாக மதிப்பீடு செய்யமுடியவில்லை.

## 3. தொகுதி, ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### 3.1 மொத்த முன்கொண்டு சென்ற தொகை

| | 01.01.2013 உள்ளவாறு மீதி | சேர்த்தல்கள் | ஆற்றல்கள்/ மாற்றீடு செய்தல் | 31.12.2013 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **3.1.1 கிரயத்தில்** | | | | |
| குத்தகை காணி மேம்படுத்தல் | 2,883 | - | - | 2,883 |
| கட்டிடங்கள் | 15,816 | - | - | 15,816 |
| மோட்டார் வாகனங்கள் | 607,443 | 55,590 | (27,557) | 635,476 |
| கணனிகள் | 259,896 | 18,617 | - | 278,513 |
| அலுவலக உபகரணங்கள் | 302,328 | 41,454 | (6,419) | 337,363 |
| பொறி இயந்திரங்கள் | 89,660 | - | - | 89,660 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 19,006,698 | 605,182 | (64,997) | 19,546,883 |
| | **20,284,724** | **720,843** | **(98,973)** | **20,906,594** |
| **விலைமதிப்பீட்டில்** | | | | |
| இறையில் காணி | 1,290,021 | 86,459 | - | 1,376,480 |
| கட்டிடங்கள் | 567,257 | 9,845 | - | 577,102 |
| | **1,857,278** | **96,304** | **-** | **1,953,582** |
| **பெறுமானத் தேய்விடத்தக்க சொத்துக்களின் மொத்தப் பெறுமதி** | **22,142,002** | **817,147** | **(98,973)** | **22,860,176** |

| 3.1.2 நிர்மாணிக்கப்பட்டு வருபவை | 01.01.2013 உள்ளவாறு மீதி | சேர்த்தல்கள் | மாற்றீடுகள் | 31.12.2013 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 489,848 | 595,346 | (679,768) | 405,426 |
| | **489,848** | **595,346** | **(679,768)** | **405,426** |
| **மொத்த முன்கொண்டு சென்ற தொகை** | **22,631,850** | **1,412,493** | **(778,741)** | **23,265,602** |

| 3.1.3 பெறுமானத்தேய்வு | 01.01.2013 உள்ளவாறு மீதி | ஆண்டிற்கான கட்டணம் | ஆற்றல்கள்/ மாற்றீடு செய்தல் | 31.12.2013 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| **கிரயத்தில்** | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| குத்தகை காணி மேம்படுத்தல் | 662 | 70 | - | 732 |
| கட்டிடங்கள் | - | 280 | - | 280 |
| மோட்டார் வாகனங்கள் | 342,026 | 69,328 | (26,879) | 384,475 |
| கணனிகள் | 225,959 | 12,038 | - | 237,997 |
| அலுவலக உபகரணங்கள் | 238,290 | 16,254 | (5,823) | 248,721 |
| பொறி இயந்திரங்கள் | 44,521 | 10,729 | - | 55,250 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | **11,268,957** | **725,320** | **(28,907)** | **11,965,370** |
| | **12,120,415** | **834,019** | **(61,609)** | **12,892,825** |
| **விலைமதிப்பீட்டில்** | | | | |
| கட்டிடங்கள் | 14,180 | 14,238 | - | 28,418 |
| | **14,180** | **14,238** | **-** | **28,418** |
| **மொத்த பெறுமானத்தேய்வு** | **12,134,595** | **848,257** | **(61,609)** | **12,921,243** |

**3. ஆதனம், பொறி மற்றும் உபகரண தொடர்ச்சி தொகுதி**

**3.1.4 தேறிய புத்தகப் பெறுமதி**

| | 2013<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 |
|---|---|---|
| **கிரயத்தில்** | | |
| குத்தகை காணி மேம்படுத்தல் | 2,151 | 2,221 |
| கட்டிடங்கள் | 15,536 | 15,816 |
| மோட்டார் வாகனங்கள் | 251,001 | 265,417 |
| கணனிகள் | 40,516 | 33,937 |
| அலுவலக உபகரணங்கள் | 88,642 | 64,038 |
| பொறி இயந்திரங்கள் | 34,410 | 45,139 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 7,581,513 | 7,737,741 |
| | **8,013,769** | **8,164,309** |
| **விலைமதிப்பீட்டில்** | | |
| இறையில் காணிகள் | 1,376,480 | 1,290,021 |
| கட்டிடங்கள் | 548,684 | 553,077 |
| | **1,925,164** | **1,843,098** |
| **மூலதன முடிவுறா வேலைகள்** | | |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 405,426 | 489,848 |
| | **405,426** | **489,848** |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய முன்கொண்டு சென்ற தொகை** | **10,344,359** | **10,497,255** |

**3. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கம்பனி**

**3.2 மொத்த முன்கொண்டு சென்ற தொகை**

**3.2.1 கிரயத்தில்**

| | 01.01.2013 உள்ளவாறு மீதி<br>ரூபா 000 | சேர்த்தல்கள்<br>ரூபா 000 | ஆற்றல்கள்/ மாற்றீடு செய்தல்<br>ரூபா 000 | 31.12.2013 உள்ளவாறு மீதி<br>ரூபா 000 |
|---|---|---|---|---|
| குத்தகை காணி மேம்படுத்தல் | 2,883 | - | - | 2,883 |
| கட்டிடங்கள் | 15,816 | - | - | 15,816 |
| மோட்டார் வாகனங்கள் | 602,835 | 55,590 | (27,557) | 630,868 |
| கணனிகள் | 258,797 | 18,514 | - | 277,311 |
| அலுவலக உபகரணங்கள் | 299,398 | 41,406 | (5,671) | 335,133 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 19,006,698 | 605,182 | (64,997) | 19,546,883 |
| | **20,186,427** | **720,692** | **(98,225)** | **20,808,894** |
| **விலைமதிப்பீட்டில்** | | | | |
| இறையில் காணி | 1,290,021 | 86,459 | - | 1,376,480 |
| கட்டிடங்கள் | 567,257 | 9,845 | - | 577,102 |
| | **1,857,278** | **96,304** | **-** | **1,953,582** |
| மொத்த பெறுமானத்தேய்வு | **22,043,705** | **816,996** | **(98,225)** | **22,762,476** |

**3. கம்பனி ஆதனம், பொறி மற்றும் உபகரண தொடர்ச்சி...........**

| 3.2.2 நிர்மாணிக்கப்பட்டு வருபவை | 01.01.2013 உள்ளவாறு மீதி | சேர்த்தல்கள் | மாற்றீடுகள் | 31.12.2013 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 492,299 | 595,346 | (679,768) | 407,877 |
| | **492,299** | **595,346** | **(679,768)** | **407,877** |
| **மொத்த முன்கொண்டு சென்ற தொகை** | **22,536,004** | **1,412,342** | **(777,993)** | **23,170,353** |

| 3.2.3 பெறுமானத்தேய்வு | 01.01.2013 உள்ளவாறு மீதி | ஆண்டிற்கான கட்டணம் | ஆற்றல்கள்/ மாற்றீடு செய்தல் | 31.12.2013 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **கிரயத்தில்** | | | | |
| குத்தகைக் காணி மேம்படுத்தல்கள் | 312 | 70 | - | 382 |
| கட்டிடங்கள் | - | 395 | - | 395 |
| மோட்டார் வாகனங்கள் | 341,902 | 68,405 | (26,879) | 383,428 |
| கணனிகள் | 225,553 | 11,818 | - | 237,371 |
| அலுவலக உபகரணங்கள் | 236,914 | 15,811 | (5,663) | 247,062 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 11,269,311 | 725,320 | (28,907) | 11,965,724 |
| | **12,073,992** | **821,819** | **(61,449)** | **12,834,362** |
| **விலைமதிப்பீட்டில்** | | | | |
| கட்டிடங்கள் | 14,180 | 14,238 | - | 28,418 |
| | **14,180** | **14,238** | **-** | **28,418** |
| **மொத்த பெறுமானத்தேய்வு** | **12,088,172** | **836,057** | **(61,449)** | **12,862,780** |

| 3.2.4 தேறிய புத்தகப் பெறுமதி | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| **கிரயத்தில்** | | |
| குத்தகைக் காணி மேம்படுத்தல்கள் | 2,501 | 2,571 |
| கட்டிடங்கள் | 15,421 | 15,816 |
| மோட்டார் வாகனங்கள் | 247,440 | 260,933 |
| கணனிகள் | 39,940 | 33,244 |
| அலுவலக உபகரணங்கள் | 88,071 | 62,484 |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 7,581,159 | 7,737,387 |
| | **7,974,532** | **8,112,435** |
| **விலைமதிப்பீட்டில்** | | |
| இறையில் காணிகள் | 1,376,480 | 1,290,021 |
| கட்டிடங்கள் | 548,684 | 553,077 |
| | **1,925,164** | **1,843,098** |
| **மூலதன முடிவுறா வேலைகள்** | | |
| உட்கட்டமைப்பு வழங்கல் | 407,877 | 492,299 |
| | **407,877** | **492,299** |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய முன்கொண்டு சென்ற தொகை** | **10,307,573** | **10,447,832** |

### 3.3 ஆதனம், பொறி மற்றும் உபகரண தொடர்ச்சி ......

காணி மற்றும் கட்டிடங்களின் சந்தைப் பெறுமதி இறுதியாக திரு. கே.ரீ.டீ. திசேரா, பீ.பீ.டீ.எதிரிசிங்ஹ, திரு. பீ.ரீ. மொஹிதீன் மற்றும் சுனில் பெர்னாந்து நிறுவனத்தின் சுதந்திர மதிப்பீட்டாளர்களால் சந்தைச் சான்றுகளின் அடிப்படையில் நிதியாண்டின் போது மீள விலைமதிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2011 திசெம்பர் 31 முதல் அமுலுக்கு வரும் வகையில் நிதிக்கூற்றுக்களில் இந்த மீள விலைமதித்தலின் விளைவுகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. மீள விலைமதித்தலினால் எழுந்த மிகை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய மீள விலைமதிக்கப்பட்ட சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகை கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு முன்கொண்டு செல்லப்பட்ட தொகையாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | கிரயம் ரூபா 000 | சொத்து கிரயத்தில் முன்கொண்டு செல்லப்படின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 000 | தேறிய முன்கொண்டு சென்ற தொகை ரூபா 000 | கிரயம் ரூபா 000 | சொத்து கிரயத்தில் முன்கொண்டு செல்லப்படின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 000 | தேறிய முன்கொண்டு சென்ற தொகை ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| கட்டிடம் | 317,055 | 84,443 | 232,612 | 317,055 | 76,517 | 240,538 |
| காணி | 502,125 | - | 502,125 | 502,125 | - | 502,125 |
| | **819,180** | **84,443** | **734,737** | **819,180** | **76,517** | **742,663** |

**3.4** நிதியாண்டின் போது, கம்பனி ரூபா 1,412 மில்லியன் மொத்தத் தொகையான (2012 - ரூபா 1,157 மில்லியன்) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தது. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஆண்டின் போது ரூபா 91 மில்லியன் (2012 - ரூபா 1,157 மில்லியன்) காசு செலுத்தப்பட்டது.

### 3.5 சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் வருமாறு

| | 2013 ஆண்டிற்கு | 2012 ஆண்டிற்கு |
|---|---|---|
| கட்டிடங்கள் | 2.5% | 2.5% |
| உட்கட்டமைப்பு வழங்கல் | | |
| உப-நிலையங்கள், உள்ளுராட்சி அதிகாரசபைகளாலும் சீஈபீ இனாலும் நிர்மாணிக்கப்பட்ட மேல் கம்பிவழிகளும் சேவை வழிகளும் | 10% | 10% |
| உப-நிலையங்கள், லெகோ இனால் நிர்மாணிக்கப்பட்ட மேல் கம்பிவழிகளும் சேவை வழிகளும் | 4% - 5% | 4% - 5% |
| மோட்டார் வாகனங்கள் | 15% | 15% |
| கணனிகள் | 20% | 20% |
| அலுவலக உபகரணங்கள் | 15% | 15% |
| பொறியும் இயந்திரங்களும் | 25% | 25% |

**3.6** கம்பனியின் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள் ரூபா 583 மில்லியன் (2012- ரூபா 2,646 மில்லியன்) முன்கொண்டு சென்ற தொகையுடைய பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

### 4. கற்புலனாகாத சொத்துக்கள்

| | 01.01.2013 இல் மீதி ரூபா 000 | சேர்ப்பனவுகள் ரூபா 000 | அகற்றல்கள் ரூபா 000 | 31.12.2013 இல் மீதி ரூபா 000 |
|---|---|---|---|---|
| **தொகுதி கிரயத்தில்** | | | | |
| தொழில்நுட்பம் தெரியும்-எவ்வாறு (சீனாவிலிருந்து) | 27,500 | - | - | 27,500 |
| | **27,500** | **-** | **-** | **27,500** |
| **காலக்கழிவு** | | | | |
| தொழில்நுட்பம் தெரியும்-எவ்வாறு (சீனாவிலிருந்து) | 7,333 | 1,833 | - | 9,167 |
| | **7,333** | **1,833** | **-** | **9,167** |
| **காலக்கழிவு** | | | | |
| தொழில்நுட்பம் தெரியும்-எவ்வாறு (சீனாவிலிருந்து) | **20,167** | | | **18,333** |

## 5. உரிமை மூலதனத்தில் முதலீடுகள் (கம்பனி)

### துணைக் கம்பனிகளில் முதலீடுகள்

| | உரித்து % | | பங்குகளின் எண்ணிக்கை | | முன்கொண்டு சென்ற பெறுமதி | பணிப்பாளரின் மதிப்பீடு | முன்கொண்டு சென்ற பெறுமதி | பணிப்பாளரின் மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 | 2013 | 2013 | 2012 | 2012 |
| | | | | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வரையறுக்கப்பட்ட லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி | 100% | 100% | 2,500,100 | 100 | 25,001 | 25,001 | 25,001 | 25,001 |
| வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி | 70% | 70% | 3,131,967 | 3,131,967 | 31,320 | 31,320 | 31,320 | 31,320 |
| கழிக்க: பெறுமதி குறைவுக்கான கொடுப்பனவு | | | | | (25,001) | (25,001) | - | - |
| | | | | | **31,320** | **31,320** | **56,321** | **56,321** |

## 6. ஏனைய நிதிச் சொத்துக்கள்

### கடன்கள் மற்றும் பெறவேண்டியவை

| | தொகுதி | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2013 Rs.000 | 2012 Rs.000 | 2013 Rs.000 | 2012 Rs.000 |
| திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் நிர்வாகக் கடன்பெறுதல்கள் | 570,000 | 570,000 | 570,000 | 570,000 |
| கம்பனி உத்தியோகத்தர்களிற்கான கடன்கள் | 1,211,207 | 351,817 | 1,211,207 | 351,337 |
| | **1,781,207** | **921,817** | **1,781,207** | **921,337** |
| இலங்கை மின்சார சபையினால் கடன் பெறல் | 3,825,000 | 3,100,000 | 3,825,000 | 3,100,000 |
| | **3,825,000** | **3,100,000** | **3,825,000** | **3,100,000** |

### விற்பனைக்காக உள்ள முதலீடுகள்

### விலைகூறப்படாத பங்கு மூலதனங்களில் முதலீடு

| | உரித்து % 2013 | உரித்து % 2012 | பங்குகளின் எண்ணிக்கை 2013 | பங்குகளின் எண்ணிக்கை 2012 | தொகுதி 2013 | தொகுதி 2012 | கம்பனி 2013 | கம்பனி 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வரை. லங்கா புரோட்பேண்ட (தனியார்) கம்பனி - சாதாரண பங்குகள் | 4% | 4% | 500,000 | 500,000 | 5,000 | 5,000 | 5,000 | 5,000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 100% | 100% | 1,500,000 | 1,500,000 | 15,000 | 15,000 | 15,000 | 15,000 |
| வரை. வெஸ்ட் கோஸ்ட் பவர் (தனியார்) கம்பனி - சாதாரண பங்குகள் | 17% | 17% | 20,000,000 | 20,000,000 | 2,000,000 | 2,000,000 | 2,000,000 | 2,000,000 |
| கழிக்க: முதலீடுகள் மதிப்பிழத்தல் | | | | | (20,000) | (20,000) | (20,000) | (20,000) |
| பங்குகளிற்கான முற்பணம் (6.1) | | | | | - | - | 47,085 | 47,085 |
| | | | | | **2,000,000** | **2,000,000** | **2,047,085** | **2,047,085** |

### மொத்த ஏனைய நிதிச் சொத்துக்கள்

| | தொகுதி 2013 | தொகுதி 2012 | கம்பனி 2013 | கம்பனி 2012 |
|---|---|---|---|---|
| ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் | 4,255,147 | 5,670,000 | 4,302,232 | 5,717,085 |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள் | 3,351,060 | 351,817 | 3,351,060 | 351,337 |
| | **7,606,207** | **6,021,817** | **7,653,292** | **6,068,422** |

## 6.1 பங்குகளிற்கான முற்பணம்

| | தொகுதி 2013 | தொகுதி 2012 | கம்பனி 2013 | கம்பனி 2012 |
|---|---|---|---|---|
| வரை. அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி - பங்குகளிற்கான விண்ணப்பம் | | | 47,085 | 47,085 |
| | **-** | **-** | **47,085** | **47,085** |

***கடன்கள் மற்றும் பெறவேண்டியவை***

முதிர்ச்சி வரைக்கும் வைத்திருக்கப்படுகின்ற மற்றும் தொகுதிக்கு நிலையான அல்லது மாறக்கூடிய வட்டி வருமானத்தை ஈட்டித்தருகின்றவை கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளாகும். தொடர்புடைய தரப்பினரின் கடன் ஆபத்தில் ஏற்படும் மாற்றங்களினால் முன்கொண்டு செல்லும் பெறுமதி தாக்கமடையலாம்.

***விற்பனைக்காக உள்ள முதலீடுகள்***

மேற்படி விலைகூறப்படாத பங்கு மூலதனங்களின் நியாயப் பெறுமதி ஆண்டின் முடிவிலுள்ளவாறு முதலீட்டுக் கம்பனியின் தேறிய சொத்துக்களைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது.

## 7. இருப்புக்கள்

| | தொகுதி | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள் | 939,917 | 1,043,197 | 840,212 | 824,543 |
| முடிவுறா வேலைகள் | 4,074 | 6,597 | - | - |
| வழியிலுள்ள பொருட்கள் | 14,804 | 35,980 | 14,804 | 33,047 |
| | **958,795** | **1,085,774** | **855,016** | **857,590** |
| **இருப்புக்களின் மதிப்பிழப்பு** | (47,956) | (16,901) | (47,956) | (16,901) |
| | **910,839** | **1,068,873** | **807,060** | **840,689** |

## 8. வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை

| | | தொகுதி | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2013 | 2012 | 2013 | 2012 |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **8.1** | **வியாபாரக் கடன்பட்டோர்** - தொடர்புடைய தரப்பினர் | 65,004 | 71,637 | 76,672 | 83,503 |
| | - ஏனையோர் | 3,288,159 | 3,053,021 | 3,280,510 | 3,050,188 |
| | | **3,353,163** | **3,124,658** | **3,357,182** | **3,133,691** |
| | **வியாபாரக் கடன்பட்டோர்** - தொடர்புடைய தரப்பினர் | 415 | 855 | 29,495 | 33,402 |
| | - ஏனையோர் | 38,271 | 68,121 | 35,337 | 34,544 |
| | முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 45,974 | 76,836 | 44,981 | 76,206 |
| | கடன்கள் மதிப்பிழப்பு | (551,280) | (527,424) | (549,939) | (527,418) |
| | | **2,886,543** | **2,743,046** | **2,917,056** | **2,750,425** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8.2** | **வியாபாரக் கடன்பட்டோர் - தொடர்புடைய தரப்பினர்** | **உறவுமுறை** | | | | |
| | இலங்கை மின்சார சபை | தாய்க்கம்பனி | 65,004 | 71,637 | 428 | 428 |
| | வரை. லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி | துணைக்கம்பனி | - | - | 3,820 | 5,652 |
| | வரை. அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி | துணைக்கம்பனி | - | - | 72,424 | 77,424 |
| | | | **65,004** | **71,637** | **76,672** | **83,503** |
| **8.3** | **வியாபாரக் கடன்பட்டோர் - தொடர்புடைய தரப்பினர்** | **உறவுமுறை** | | | | |
| | இலங்கை மின்சார சபை | தாய்க்கம்பனி | 415 | 855 | - | - |
| | வரை. லெகோ புரஜெக்ட் (தனியார்) கம்பனி | துணைக்கம்பனி | - | - | 25,070 | 31,680 |
| | வரை. அன்டெ லெகோ மீற்றரிங (தனியார்) கம்பனி | துணைக்கம்பனி | - | - | 4,425 | 1,722 |
| | | | **415** | **855** | **29,495** | **33,402** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **9.** | **கூறப்பட்ட மூலதனம்** **(கம்பனி/தொகுதி)** **வழங்கி முழுவதும் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்** | **2013** எண்ணிக்கை | **2012** எண்ணிக்கை | **2013** ரூபா 000 | **2012** ரூபா 000 |
| | ஏ பங்குகள் | 113,580,264 | 113,580,264 | 1,135,803 | 1,135,803 |
| | பீ பங்குகள் | 926,390 | 926,390 | 9,264 | 9,264 |
| | | **114,506,654** | **114,506,654** | **1,145,067** | **1,145,067** |

சாதாரணப் பங்குகளை வைத்திருப்போர் அவ்வப்போது பிரேரிக்கப்படுகின்ற பங்கிலாபத்தைப் பெறுவதற்கான உரித்தினை உறுதிப்படுத்தியதுடன் கம்பனியின் கூட்டங்களில் ஒரு பங்கிற்கு ஒரு வாக்கு உரித்தாக உள்ளது. கம்பனியின் தேறும் சொத்துக்கள் தொடர்பில் சகல பங்குகளும் ஒத்த தரம் கொண்டவையாகும்.

| | 2013 | 2012 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| **10. உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள்** | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **10.1 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** | | | | |
| காணிகள் | 1,010,352 | 1,010,352 | 1,010,352 | 1,010,352 |
| கட்டிடங்கள் | 117,622 | 117,622 | 117,622 | 117,622 |
| | **1,127,974** | **1,127,974** | **1,127,974** | **1,127,974** |
| **10.2 வருமான ஒதுக்கங்கள் பொழிப்பு** | | | | |
| | 109,258 | 109,258 | 109,258 | 109,258 |
| | 311,641 | 311,641 | 311,641 | 311,641 |
| | 29,000 | 29,000 | 29,000 | 29,000 |
| | **449,900** | **449,900** | **449,900** | **449,900** |

### 10.2.1 அந்நியச் செலாவணி ஒதுக்கம்

மூலதனப் பொருட்களின் வழங்கல்கள் நிலவிய உயர் விலை வீதங்களில் கிடைக்கப்பெற்று கணக்கீடு செய்யப்பட்டு கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுகையில் இலாபம் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிறப்பு எடுப்பனவு உரிமை மீதான தவணைக் கடன்கள் இலங்கை அரசாங்கத்திற்கு ஒப்பந்த வீதங்களில் செலுத்தப்படுகையில் முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட அந்நியச் செலாவணி இலாபத்தினை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### 10.2.2 சொத்துக்களை மீள வைத்தல் ஒதுக்கம்

கம்பனியின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களை மீள வைத்தல் மற்றும் புனரமைத்தலுக்கான இலாபத்திலிருந்து வேறுபடுத்தப்பட்ட தொகைகளை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு மீதி | 311,641 | 311,641 | 311,641 | 311,641 |
| ஆண்டின் போதான செலவினம் | - | - | - | |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | **311,641** | **311,641** | **311,641** | **311,641** |

### 10.2.3 காப்புறுதி ஒதுக்கம்

கம்பனியின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களிற்கும் இருப்புக்களிற்குமான இழப்புக்கள் மற்றும் சேதங்களை அறவிட்டுக் கொள்வதற்காக நிறுத்தி வைத்த வருமானத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகைகளை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது.

| **10.3 விற்பனைக்காக உள்ள ஒதுக்கம்** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய (நட்டம்)/இலாபம் | - | - | (25,001) | - |
| | **-** | **-** | **(25,001)** | **-** |
| **உரிமைத்துவத்தின் மொத்த ஏனைய கூறுகள்** | **1,577,874** | **1,577,874** | **1,552,873** | **1,577,874** |

## 11. வட்டிக் கடன்கள் மற்றும் பெறுகைகள்

### 11.1 தொகுதி

| | 2013 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குள் ரூபா 000 | 2013 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குப் பின்னர் ரூபா 000 | 2013 மொத்தம் ரூபா 000 | 2012 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குள் ரூபா 000 | 2012 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குப் பின்னர் ரூபா 000 | 2012 மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| வங்கிக் கடன்கள் (11.1.1) | 56,026 | - | 56,026 | 77,422 | 55,169 | 132,592 |
| வங்கி மேலதிகப்பற்று (23) | 15,431 | - | 15,431 | 46,013 | - | 46,013 |
| | **71,457** | **-** | **71,457** | **123,435** | **55,169** | **178,605** |

#### 11.1.1

| வங்கிக் கடன்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி | வட்டி வீதம் (%) | மீளளிக்கப்பட வேண்டிய காலம் ரூபா 000 | தவணைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 000 | 2013.01.01 இல் உள்ளவாறு ரூபா 000 | பெறப்பட்ட கடன்கள் ரூபா 000 | மீளளித்தல் ரூபா 000 | 2013.12.31 இல் உள்ளவாறு ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|---|
| செயற்திட்டம் 2 | 10.50 | 20 years | 22,253 | 66,760 | - | (44,507) | 22,253 |
| செயற்திட்டம் 3 | 13.00 | 15 years | 16,458 | 65,832 | - | (32,059) | 33,773 |
| | | | | **132,592** | **-** | **(76,566)** | **56,026** |

மேற்படி கடன்கள் இலங்கை அரசாங்கத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டிருந்ததுடன் வரை.லங்கா மின்சாரக் கம்பனிக்கு மீள வழங்கப்பட்டிருந்தது.

### 11.2 கம்பனி

| | 2013 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குள் ரூபா 000 | 2013 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குப் பின்னர் ரூபா 000 | 2013 மொத்தம் ரூபா 000 | 2013 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குப் பின்னர் ரூபா 000 | 2012 செலுத்த வேண்டிய தொகை 1 ஆண்டிற்குப் பின்னர் ரூபா 000 | 2012 மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| வங்கிக் கடன்கள் (11.2.1) | 56,026 | - | 56,026 | 77,422 | 55,169 | 132,592 |
| வங்கி மேலதிகப்பற்று (23) | 15,431 | - | 15,431 | 45,376 | - | 45,376 |
| | **71,457** | **-** | **71,457** | **122,798** | **55,169** | **177,968** |

#### 11.2.1

| வங்கிக் கடன்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி | வட்டி வீதம் (%) | மீளளிக்கப்பட வேண்டிய காலம் ரூபா 000 | தவணைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 000 | 2013.01.01 இல் உள்ளவாறு ரூபா 000 | பெறப்பட்ட கடன்கள் ரூபா 000 | மீளளித்தல் ரூபா 000 | 2013.12.31 இல் உள்ளவாறு ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|---|
| செயற்திட்டம் | 10.50 | 20 years | 22,253 | 66,760 | - | (44,507) | 22,253 |
